# அன்பு மேகமே...!

1

அஸ்வினி கண்ணாடியின் முன் நின்று தன்னை அலங்கரித்துக் கொண்டிருந்தாள்.

''அஸ்வினி.. சித்ரா வந்திருக்கா?'' என்றபடி அறைக்குள் வந்தாள் ஜெயம்.

''உக்கார வைம்மா... அஞ்சு நிமிஷத்திலே வந்திடறேன்..''

பத்து நிமிஷம் ஹாலில் அமர்ந்திருந்த சித்ரா, பிறகு நேரே அறைக்கு வந்து விட்டாள்.

''ஷாப்பிங் போறதுக்கு இவ்வளவு அலங்காரமா.. கிளம்பு.. கிளம்பு.''

''இதோ.. முடிச்சாச்சு..'' மெல்லியதாய் லிப்ஸ்டிக்கைத் தீற்றிக் கொண்டவள், இவள் பக்கம் திரும்பி, ''நல்லாயிருக் கேனா?'' என்றாள்.

''உனக்கென்னடி குறைச்சல்? அலங்காரமே தேவை யில்லாத அழகியாச்சே!''

இருவரும் சிரித்தபடி கிளம்பினர்.

''அம்மா! வர்றேம்மா!''

''போய்ட்டு வர்றேன், ஆன்ட்டி!''

''பத்திரமா போய் வாங்க!'' வாசல் வரை வந்தாள் ஜெயம்.

சித்ரா அஸ்வினியின் நெருங்கிய தோழி. நாலு தெரு தள்ளி வசிப்பவள். ஒரே கல்லூரியில், ஒரே வகுப்பில் படித்தவர்கள்.

''ஆட்டோவுல போகலாமா, அஸ்வினி?''

''வேணாம்.. பஸ்ல போகலாம்... பஸ்ல போய் ரொம்ப நாளாச்சு!''

''பீக் அவராச்சே... கூட்டமாயிருக்குமே!''

''பரவாயில்லை.. வா!'' அவளை இழுத்துக் கொண்டு நடந்தாள் அஸ்வினி.

பஸ் ஸ்டாண்டில் கூட்டம் அதிகமிருந்தது.

''சொன்னேனே... கேட்டியா? பார்.. எவ்வளவு கூட்டம்!''

''இருக்கட்டும், இருக்கட்டும்..'' என்ற அஸ்வினியின் கண்கள் சாலையில் அலைபாய்ந்தன. எதையோ தேடின. புரிந்து கொண்ட சித்ரா கிண்டலாய்ச் சிரித்தாள்.

''புரியுது.. புரியுது.. மேடம் ஏன் பஸ்ல.. அதுவும் இந்த நேரத்துல.. போகலாம்னு சொன்னீங்கன்னு..''

''ஏய்... அதெல்லாம் ஒண்ணுமில்லே!'' வெட்கத்துடன் மறுத்தாலும் கண்கள் அலை பாய்ந்து கொண்டேதான் இருந்தன.

''சத்தியமா ஒண்ணுமில்லே?''

சித்ரா கேட்டதும் அஸ்வினி பெருமூச்சு விட்டாள்.

''அவனை நான் மறுபடி பார்க்க மாட்டேனா, சித்ரா?'' ஏக்கத்துடன் வெளிப்பட்டது குரல்.



சித்ரா பரிதாபமாய்ப் பார்த்தாள். இவர்கள் இருவரும் கல்லூரிப் படிப்பை முடித்து ஒரு வருடம் ஆகிவிட்டது. கல்லூரி செல்லும்போது பஸ்ஸிற்காகக் காத்திருக்கும் அதே நேரத்தில் இந்த சாலையில் வழக்கமாய் பைக்கில் செல்லும் இளைஞன் ஒருவன் அஸ்வினியைக் கவர்ந்தான்.

கண்ணியமான, கம்பீரமான தோற்றம்! அவன் யார்? என்ன பேர்? எதுவுமே தெரியாது. ஆனால் கண்களில் விழுந்து இதயத்தில் நிரம்பி விட்டான்.

படிப்பு முடிந்தபின் வேலைக்குச் செல்ல வேண்டும் என்கிற அஸ்வினியின் ஆசையில் மண் விழுந்தது. அவளின் பெற்றோருக்குப் பெண்ணை வேலைக்கு அனுப்புவதில் உடன்பாடில்லை.

''அஸ்வினி... இது உனக்கே பைத்தியக்காரத்தனமாகத் தெரியலே? இன்னுமா அவனை நினைச்சிட்டிருக்கே? வீட்லே பார்க்கிற அலையன்ஸையெல்லாம் வேண்டாம்னு ஏன் தட்டிக் கழிக்கறேன்னு இப்ப புரியுது. கடைந்தெடுத்த முட்டாள்தனம். அவன் யார்? உன்னை அவன் பார்த்திருக்கிறானா? பேசியிருக்கிறானா? இல்லையே.. ஒருவேளை அவன் கல்யாணமானவனா கூட இருக்கலாம்...! மறந்துடு அஸ்வினி... வீட்லே பார்க்கிற பையனைக் கல்யாணம் பண்ணிக்கிட்டு சந்தோஷமா வாழற வழியைப் பார்!''

''இல்லே சித்ரா... அவனை நான் மறுபடி பார்ப்பேன். என் மனசு சொல்றது.. எங்களுக்குள்ளே ஏதோ ஒரு பந்தம் இருக்குதுன்னு..''

''மண்ணாங்கட்டி.. அதோ பஸ் வந்தாச்சு!''

தரகர் கொடுத்த ஜாதகங்களை ஒவ்வொன்றாய்ப் பார்த்துக் கொண்டிருந்த தமயந்தி திருப்தியின்றித் திருப்பிக் கொடுத்தாள்.

''ஒண்ணுகூட சரிப்படலையே..''

''என்னம்மா அப்படிச் சொல்லிட்டீங்க? எல்லாமே உங்க குடும்பத்துக்கு ஏத்த மாதிரி பார்த்துப் பார்த்து செலக்ட் பண்ணி எடுத்துட்டு வந்த வரன்களாச்சே..''

''எது.. கிளார்க்கும், அட்டெண்டருமா வேலை செய்யறவனுங்க... எங்களுக்கு ஏத்த இடமா?''

''கோபப்படாதீங்கம்மா... பைக்.. இதர சீர்செனத்தியோட, இருபத்தஞ்சு பவுன் நகையோட முடிக்கணும்னா.. இந்த மாதிரி வரன்களைத்தானே பார்க்க முடியும்?''

''சீர் செனத்தியைப் பத்தி கவலைப்படாம வசதியான இடமாகப் பாரும். முக்கியமா மாப்பிள்ளை உயர்வான போஸ்டிங்ல இருக்கணும்!''

''நிறைய எதிர்பார்ப்பாங்களேம்மா?''

''அதைப்பத்தி உங்களுக்கென்ன கவலை? சொன்னதை மட்டும் செய்யுங்க!''

''சரிங்கம்மா.. சீக்கிரமே லட்டு மாதிரி வரன்களோட வர்றேன்!'' கிளம்பிப் போய் விட்டார் தரகர். அவர் போனதும் சொக்கலிங்கம் மனைவியின் எதிரில் வந்தமர்ந்தார்.

''ஏன் தமயந்தி.. தரகர் கொண்டு வந்ததெல்லாம் நம்ம வசதிக்கேத்த மாதிரி, நம்ம நந்தினிக்கேத்த மாதிரியான அலையன்ஸ்தானே! ஏன் வேண்டாம்னே?''



''என்னை மாதிரி யில்லாம.. என் பொண்ணாவது சந்தோஷமா வாழட்டுமே!''

''என்ன சொல்றே நீ?''

''சாதாரண வின்ச் ஆபரேட்டரான உங்களைக் கல்யாணம் பண்ணி என்னத்தை வாரிக் கட்டிக்கிட்டேன், சொல்லுங்க? சொந்தமா ஒரு மனை உண்டா? நிரந்தரமா இருபது பவுன் நகையாவது பீரோ லாக்கர்ல இருந்ததுண்டா? அப்பப்போ மார்வாடி கடைக்கு அனுப்பறதும், வரவழைக்கறதுமா.. என்ன வாழ்க்கை இது! என் பொண்ணுக்கு ஆபிஸரா பார்த்துதான் கல்யாணம் பண்ணி வைப்பேன்.''

''நிறையப் பணம் வேணுமே, தமயந்தி.''

''சிங்கக் குட்டி மாதிரி ஒரு பிள்ளையைப் பெத்து வச்சிருக்கேனே.. எதுக்காக? பார்த்துக்கிட்டேயிருங்க, என் சாமர்த்தியத்தை!''

சொக்கலிங்கம் வாயை மூடிக் கொண்டார்.

லஞ்ச் டைம்!

அமுதனும், முகுந்தனும் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர். அவரவர் சாப்பாட்டைப் பகிர்ந்து கொள்ளுமளவிற்கு நல்ல நண்பர்கள். ஒரே அலுவலகத்தில் பணிபுரிபவர்கள்.

''உன் ஃப்ரைட் ரைஸ் அமர்க்களமாயிருக்கு. அம்மா சமைச்சாங்களா?'' ருசித்துச் சாப்பிட்டபடி கேட்டான் அமுதன்.

''ம்ஹூம்.. அண்ணி சமைச்சாங்க!''

''நல்லா சமைக்கிறாங்க. பாவம்... இந்த வயசுலேயே வாழ்க்கையைத் தொலைச்சிட்டு நிக்கறாங்க. உங்கண்ணன் இறந்து நாலு வருஷம் ஆகிடுச்சில்லே?''

''அஞ்சு வருஷம் முடிஞ்சிடுச்சு!'' என்றவன், பெருமூச்சு விட்டான். சாப்பிடாமல் பாதியிலேயே மூடி வைத்தான்.

''என்ன முகுந்தன்... சாப்பிடாம..''

''மனசு சரியில்லே, அமுதன்!''

''என்னாச்சு?''

''வீட்லே பொண்ணு பார்க்கிறாங்க..!''

''நல்ல விஷயம்தானே?''

''ஆனா, ஆனா நிறையச் சிக்கல் இருக்கு, அமுதன்.''

''ஓ.. கல்யாண வயசுல உனக்கொரு தங்கையிருக்கான்னு சொன்னியே... அதுவா? பேசாம அவளுக்கு முடிச்சிட்டு நீ பண்ணிக்க..''

''நான் உன்கிட்டே நெறையப் பேசணும், அமுதன். குழப்பமாயிருக்கு. கமிங் சண்டே வீட்டுக்கு வர்றியா?''

என்றைக்கும் அழைக்காதவன்.. முதன் முதலாய் வீட்டிற்கு அழைக்கிறான். முகம் முழுக்க கலக்கம். என்ன பிரச்சினை இவனுக்கு?

''வர்றேன்,'' என்றான் அமுதன்.

## 2

காலிங் பெல் அலறியதையடுத்துக் கதவு திறக்கப்பட, அழகிய இளம்பெண்ணொருத்தி கண்களில் கேள்வியைத் தேக்கி வைத்துக் கொண்டு நின்றிருந்தாள்.



முகுந்தனின் தங்கையாயிருக்கும் என்று யூகித்தவன், ''என் பேர் அமுதன்.. முகுந்தனின் நண்பன்!'' என்றான்.

மெல்லிய புன்னகை படர்ந்தது அவளுக்கு.

''உள்ளே வாங்க.. அண்ணா.. அண்ணா..!'' என்று அழைத்தபடி விரைந்து, காணாமல் போனாள்.

''வா.. உள்ளே வா அமுதன்!'' ஆரவாரமாய் அழைத்தபடி முகுந்தன் வர.. அவன் பின்னேயே அம்மா வந்தாள். ஸ்வீட், பழங்கள் அடங்கிய பிளாஸ்டிக் கவரை நீட்டினான்.

''எதுக்கு இந்த ஃபார்மாலிட்டியெல்லாம்!'' என்றபடி வாங்கிக் கொண்டவன், அம்மா பக்கம் திரும்பி, ''இவன் பேர் அமுதன். நாங்க ரெண்டு பேரும் ஒரே ஆபீஸ்லேதான் வேலை செய்யறோம்,'' என்றான்.

''வணக்கம் தம்பி!'' வயோதிகமும், கவலையும் முகத்தில் நிரந்தரச் சுருக்கத்தைத் தந்துவிட்டிருந்த பார்வதம் கை கூப்பினாள்.

''வணக்கம்மா! முகுந்தன் உங்களைப் பத்தி நிறையச் சொல்லுவான்... இப்ப உடம்பு எப்படிம்மா இருக்கு?''

''ஒண்ணுபோனா ஒண்ணு மாத்தி வந்துக்கிட்டே இருக்கு, தம்பி... இவனுக்குப் பாரமா இருக்கோமேன்னு கவலைப் பட்டுக்கிட்டு...''

''முகுந்தன் உங்க மேல உயிரையே வச்சிருக்கிறான். பாரம்,அது இதுன்னு நீங்களாகவே ஏன் கற்பனை பண்ணிக் கிறீங்க?''

''இப்படி கவலைப்படறதாலதான் நோய் கெட்டியா பிடிச்சிருக்கு. நீ மாடிக்கு வா... அம்மா! இன்னைக்கு

அமுதனுக்கு நம்ம வீட்லேதான் சாப்பாடு. ஏற்பாடு பண்ணச் சொல்லும்மா... நீ வா!''

வீட்டை நோட்டமிட்டபடி அவனுடன் சென்றான் அமுதன். சிறிய வீடுதான். கீழே இரண்டு அறைகள், ஹால், கிச்சன், பாத்ரூம், மாடியில் ஒரு அறை எனக் கச்சிதமாக... சுத்தமாக இருந்தது.

பொதுவாய்ச் சில விஷயங்களைப் பேசிக் கொண்டிருந்த பின் கேட்டான்.

''என்னவோ பேசணும்னு சொன்னியே... என்ன விஷயம், முகுந்தன்?''

''முதல்ல சாப்பிட்டு முடிச்சிடுவோமே!''

''ஓக்கே!''

முகுந்தனின் அண்ணியும், தங்கையும் பரிமாறினார்கள். அருமையான உணவு.

அவளைப் பார்க்கும்போது மனசு பிசையவே செய்தது.

இருபத்தைந்து வயதுக்குள்தான் இருக்கும். கொடிபோல் அழகாயிருந்தாள். முகத்தில் சாந்தம். நெற்றியில் மச்சம் போல் சின்னதாய்க் கருப்பு ஸ்டிக்கர். வெறுமையான கழுத்து. நாலு வயதுக் குழந்தைக்குத் தாய் என்றால்.. சாருமதியைப் பார்க்கிறவர் எவராயினும் நம்ப மாட்டார்.

சாப்பிட்டு முடித்த பின், அறைக்குள் சென்று தாழிட்டுக் கொண்டனர். ''உங்கண்ணியோட கைப்பக்குவம் அருமை முகுந்தன். இவ்வளவு சுவையாய் நான் சாப்பிட்டதே இல்லை!''



''எல்லா விஷயத்திலும் தனித்துவமுள்ள கேரக்டர்தான் அண்ணி.''

''சரி.. என்ன விஷயம், சொல்லு?''

''இந்தக் குடும்பம் நானில்லேன்னா.. சக்கரம் கழன்ட தேர் மாதிரி, அமுதன். அப்பா போன பிறகு அண்ணனும் நானும்தான் காப்பாற்றி வருகிறோம். அண்ணன் ஆக்ஸிடன்ட்ல போன பிறகு முழுக்கவே என் சப்போர்ட் தேவைப்பட்டது என் குடும்பத்துக்கு. இந்தச் சூழ்நிலையில எனக்குக் கல்யாணம்னா..''

''இரு..ஏன் கல்யாணமானா என்ன? உனக்கொரு துணை அவசியம் முகுந்தன். உனக்கும் வயசாகுது. அதே சமயம் தங்கையை வீட்ல வச்சுக்கிட்டு கல்யாணம் பண்றது சரிவராது. முதல்ல அவளுக்குப் பார்த்து முடிச்சிட்டு நீ பண்ணிக்க!''

''அம்ருதாவுக்குக் கல்யாணமா? அதெப்படி முடியும்?'' என்றான் விரக்தியுடன்.

''என்ன கேள்வியிது?''

''அவள் மலராத மொட்டு, அமுதன்!''

''வாட்?''

''ஆமாம்.. இயற்கை என் தங்கை விஷயத்தில் மோசமா விளையாடிடுச்சு, அமுதன். எத்தனையோ டாக்டரைப் பார்த்தாச்சு. ப்ச்.. நம்பிக்கையா எதையும் சொல்லலே. நடக்கலாம், நடக்காமலும் போகலாம்னு சொல்லிட்டாங்க.''

''கொடுமை!''

''அம்மா, அண்ணி, அண்ணியோட மகள், தங்கைன்னு கடைசி வரைக்கும் என் நிழல் தேவைப்படற இந்த ஜீவன்கள்...

கல்யாணம்ங்கற பேர்ல வரப்போகிற என் மனைவியால மனம் புண்படுகிற வாய்ப்புகள் நிறையவே இருக்கு, அமுதன்.''

''உங்க அண்ணியை அவங்க அம்மா வீட்டுக்கு அனுப்பி வச்சிடலாமே! ஏன்னா, புருஷனோட ரத்த பந்தம்னாக் கூட ஓரளவு அனுசரணையை வரப் போறவ கிட்ட எதிர் பார்க்கலாம், ஆனா, அவங்களை...''

''அந்தக் குழப்பம்தான் இப்ப எனக்கு..''

''இதிலே குழம்பறதுக்கு என்ன யிருக்கு? அண்ணி நல்லவங்கதான்.. மறுக்கலே. ஆனா, இந்த சொஸைட்டிக்கு நல்லதைப் பார்க்கத் தெரியாது. நல்லதைப் பேசத் தெரியாது. நாளைக்கே, உன் பேரோ, அவங்க பேரோ மோசமா அடிபட வாய்ப்பிருக்கே!''

''பாவம், அமுதன்! அவங்க. அண்ணனைக் காதலிச்சு அவங்க வீட்டை எதிர்த்துதான் கல்யாணம் பண்ணிக் கிட்டாங்க. அன்னைலேர்ந்து அவங்க வீடு இவங்களைத் தலைமுழுகிடுச்சு. அண்ணனோட டெத்துக்குக் கூட வரலே! அதிகமா படிக்கலே. வெகுளி. எப்படி, எங்கே அனுப்ப முடியும் சொல்லு? குழந்தை வேற.. அதுவும் பொம்பளைப் பிள்ளை! என்ன பண்ணுவாங்க?''

''ஓ!'' என்றான் யோசனையாய்.

''இப்படியோர் இக்கட்டான சூழ்நிலையிலே புதிதாய் இன்னொரு பெண்.. எப்படித் தாங்கும் இந்த வீடு!''

''இப்படிப் பண்ணினா என்ன?''

''எப்படி?''



''உங்க அண்ணிக்கு மறு கல்யாணம் பண்ணி வச்சிட்டா என்ன? நாட்டிலே எத்தனையோ புரட்சி எண்ணங்கள் கொண்ட ஆண்கள் இருக்கிறார்கள், அல்லவா?''

முகுந்தன் சிரித்தான்.

''என்ன சிரிக்கிறே?''

''அந்த ஆண்கள் கூட்டத்தில் நானும் ஒருத்தன், அமுதன்!''

''என்ன சொல்றே, முகுந்தன்?''

''யெஸ்.. உனக்கே தெரியும் என்னைப் பத்தி. உன்னைப் போல எண்ணங்கள் கொண்டவன்தான் ஒரு விதவைக்கு வாழ்க்கை கொடுக்கணும்னு மீசை அரும்பிய பருவத்திலேயே மனசுக்குள் லட்சியத்தை விதைச்சவன் நான்!''

''மு..கு...ந்.. த.. ன்..!'' பிரமிப்புடன் பார்த்தான்.

''பாவம் அவங்க.. கல்யாணமான ஒரே வருஷத்துல அண்ணனை இழந்துட்டாங்க. இதுவரைக்கும் என்னை நிமிர்ந்து பார்த்து ஒரு வார்த்தை பேசினதில்லே. பெத்தவங்க ஆதரவையும் இழந்து, கணவனையும் இழந்து, பரிதாபமான நிலையிலே நிற்கிற அவங்களுக்குத்தான் கண்டிப்பா இன்னொரு வாழ்க்கை தேவை!''

''முகுந்தன்... எனக்கு என்ன பேசறதுன்னே தெரியலை, முகுந்தன். புரட்சிகரமா பேசறதே ஒரு ஸ்டைல்னு ஆகிப் போன இந்தக் காலத்திலே.. அதைச் செயல்படுத்தத் துடிக்கிற உன்னைப் பார்த்தா.. ரொம்ப அருமையா இருக்கு! சரியான முடிவைத்தான் எடுத்திருக்கே..''

''ஆனா..''

''என்ன ஆனா?''

''இதை அம்மாவும், அவங்களும் எந்த மாதிரி எடுத்துக்கப் போறாங்களோ தெரியலை.. அவங்களை நான் தப்பான கோணத்துல இதுவரை...''

''சேச்சே... இப்படி அவங்க நினைச்சிருந்தா எப்பவோ வீட்டை விட்டுப் போயிருப்பாங்க! மனைவி இறந்துட்டா மச்சினச்சியைக் கல்யாணம் பண்ணிக்கலையா? விரசமாக நினைக்கிறவங்க, நினைச்சிட்டுப் போகட்டும். பட்ட மரத்தைத் துளிர்விட வைக்கப் போகிறே! உன் நல்ல மனசை உன் வீடு புரிஞ்சுக்கும். அம்மாகிட்டே பக்குவமா எடுத்துச் சொல்லு... பெருமையா நினைப்பாங்க. அவங்களும் மறுக்க வாய்ப்பில்லே! நிர்கதியான தனக்கு இதை விடப் பெரியதாய்க் கடவுள் கருணை செய்ய மாட்டார்னு புரிஞ்சுக்குவாங்க!''

முகுந்தன் சிரித்தான்.

''கொஞ்ச நஞ்சக் குழப்பமும் இப்பதான் தீர்ந்தது. ரொம்ப தாங்க்ஸ் அமுதன்!''

## 3

''அம்மா... கோவிலுக்குப் போய்ட்டு வர்றேன்!'' நந்தினி தமயந்தியின் முன் வந்து நின்றாள்.

அழகோவியமாய் நின்றிருந்த மகளைப் பெருமையுடன் பார்த்தாள். ''என் கண்ணே பட்டுடும் போலிருக்கே, நந்தினி! போய்ட்டு சீக்கிரம் வந்திடு! சாமியை நல்லா வேண்டிக்கோ. ஒரு டாக்டரோ, என்ஜினீயரோ மாப்பிள்ளையா வரணும்னு அடிப்பிரதட்சணம் பண்ணு!''



''போம்மா!'' என்று வெட்கத்துடன் தலைகவிழ்ந்தாள்.

''இவ ஒருத்தி.. இதுல வெட்கப்பட என்னடி இருக்கு? நான் சொன்ன மாதிரி பண்ணிட்டு வா... நேரமாச்சு. புறப்படு!''

''வர்றேம்மா!'' நகர்ந்தாள்.

அப்போது...

அமுதன் வீட்டிற்குள் நுழைந்து கொண்டிருந்தான்.

''நந்தினி எங்கேம்மா போகிறா?''

''கோவிலுக்கு...''

''இருட்டிப் போச்சே... தனியாகவா அனுப்பறே? கூட நீயும் போயிருக்கலாமே!''

''அவ என்ன சின்னக் குழந்தையா? பத்திரமா போய்ட்டு வந்துடுவா. தரகரை வரச் சொல்லியிருந்தேன். அவருக்காகத் தான் காத்துக்கிட்டிருக்கேன். அதான் கூடப் போக முடியலை!''

''அவரும் பாவம் கட்டுக்கட்டா.. அலையன்ஸைத் தூக்கிக்கிட்டு நடையா நடந்துக்கிட்டிருக்கார். உனக்குத்தான் திருப்தி வரலே. கையிலே வெண்ணெயை வச்சுக்கிட்டு நெய்க்கு அலைஞ்சிட்டிருக்கிறே!''

''என்ன அமுதன்... உனக்கு நீயே என்னமோ பேசிட்டிருக்கே!''

''ஒண்ணுமில்லே.. காபி கிடைக்குமா?''

''தரகர் வந்திடட்டும்.. ரெண்டு பேருக்கும் சேர்த்தே போட்டுத் தர்றேன்.''

''என்னமோ செய்...!'' வெறுப்புடன் தன்னறைக்குச் சென்றான்.

முகம் கழுவி உடை மாற்றிக் கொண்டவன் மொட்டை மாடிக்குச் சென்றான்.

பிய்ந்து போன தலையணையாய் மேகப் பஞ்சு சிதறிக் கிடந்ததைப் பாதி முகம் மறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தது நிலா.

குளிர்ச்சியான தென்றலைச் சுமந்தபடி மெல்ல வந்து கொண்டிருந்தது இரவு. அன்று மாலை முகுந்தன் அலுவலகத்தில் சொன்ன விஷயம் நினைவிற்கு வந்தது.

''அமுதன்... ஒரு நல்ல விஷயம் சொல்லப் போகிறேன். என்னன்னு கெஸ் பண்ணு பார்க்கலாம்!''

''ப்ரமோஷனா? அப்படி யிருந்தா எனக்கும் தெரிஞ்சிருக் குமே! இன்க்ரீமென்ட்டா?''

''இல்லே...''

''காலையிலே வரும்போதே உன் முகத்துல ஒரு உற்சாகத் தைப் பார்த்தேன். பைக்கை மாத்தணும்னு சொல்லிட்டிருந் தியே... புதுசா வாங்கிட்டியா..?''

''ம்ஹூம்... அதுவுமில்லே!''

''பின்னே?''

''நாலு நாள் முன்னாடி அம்மாகிட்டே பேசிட்டேன். அம்மாவுக்கும் இப்படியொரு எண்ணம் முன்னாடியே இருந்திருக்கு. நான் என்ன நினைச்சுப்பேனோன்னு பயந்து... பேசாம இருந்திருக்காங்க. நானே சொன்னதும் ரொம்ப சந்தோஷப்பட்டாங்க.''

''வெரி குட்..''



''அம்மா.. அவங்ககிட்டேயும் பேசி... யோசிக்க வச்சு, இன்னைக்குச் சம்மதம் சொல்லிட்டாங்க...!''

அமுதன் சில கணங்கள் நண்பனையே பார்த்தவன், பெருமிதத்துடன் இழுத்து அணைத்துக் கொண்டான்.

''ப்ரவுட் ஆஃப்யூ... ஐயம் ப்ரவுட் ஆஃப்யூ முகுந்தன். புரட்சி பேசறவங்க எத்தனையோ பேர் இருக்காங்க. ஆனா, செயல்ல காட்டறவங்க எத்தனை பேர்? நீ நல்லாயிருப்பே முகுந்தன்... அமோகமாயிருப்பே!'' மனதார வாழ்த்தினான்.

அமுதன் குளிர் காற்றை மூச்சிழுத்து உள்வாங்கி நிரப்பிக் கொண்டான். எத்தனையோ ஆண்கள் விதவைகளுக்கு மறுவாழ்வு தருகிறார்கள்தான். அதில் சில பேர் தங்கள் சுயநலத்துக்காக அழகிற்காகவும், பணத்துக்காகவுமே வாழ்க்கை தருகிறார்கள். ஆனால், முகுந்தன்? தான் பிறந்ததற்கு ஒரு அர்த்தத்தை உண்டாக்கி விட்டான்.

காபி சாப்பிட வேண்டும் போல் தோன்ற.. கீழே இறங்கினான்.

அம்மாவின் பேச்சுக் குரல் கேட்டது.

தரகர் வந்திருந்தார்.

''இதோ பாருங்க.. வரதட்சிணையிலே பத்து ரூபா குறைஞ்சாக் கூட வாங்க மாட்டேன். நகையிலே குண்டுமணி அளவு குறைஞ்சாக் கூட ஒத்துக்க மாட்டேன். என் பிள்ளையோட தகுதிக்கு இதைவிட அதிகமாகவே கேக்கலாம். நான் எதிர்பார்க்கிற அளவுக்குச் சீக்கிரமே வரனோட வாங்க!''

''ஏற்கெனவே உங்க பையன் வரனுக்கு நிறையப் போட்டி தான்! ஜாதகப் பொருத்தத்தோட, நல்ல சம்பந்தத்தோட அடுத்த வாரமே வர்றேன்.. புறப்படறேம்மா!'' தரகர் போய்விட்டார்.

நெற்றி சுருங்க அம்மாவிடம் வந்தான்.

''அதுக்குள்ளே எங்கே போய்ட்டே? காபி போட்டு எடுத்து வந்தேன். ஆறியே போச்சு. இரு. சூடாப் போட்டுக் கொண்டு வர்றேன்!'' தமயந்தி எழ முற்பட்டாள்.

''இரும்மா... தரகர் கிட்டே என்ன பேசிட்டிருந்தே?''

''வரன் பார்க்கச் சொன்னேன்!''

''யாருக்கு?''

''உனக்கும்தான்!''

''எனக்கென்ன அவசரம் இப்ப? நந்தினிக்கு முதல்ல முடியட்டும். அப்புறம் எனக்குப் பார்க்கலாம்.''

''எது நடக்கணுமோ... அதுதான் நடக்கும்.. விடு!''

''சரி.. என்னமோ பட்டியல் போட்டுட்டிருந்தே.. பணம், நகைன்னு... வரதட்சிணை கேக்கப் போறியா?''

''பின்னே? என் பொண்ணுக்கு நான் தர்றேனே..''

''கேட்காத இடமாப் பார்த்து நந்தினியைக் கொடு! இதோ பாரும்மா... எனக்குன்னு ஒரு லட்சியம் இருக்கு. என் மனைவியா வரப் போறவகிட்டே ஒரு பத்துப் பைசாக் கூட வாங்கக் கூடாது..''

''பேச நல்லாதான் இருக்கும். ஆனா, நடைமுறை வாழ்க்கைன்னு வரும் போது, பாழாப் போன பத்துப் பைசா பெறாத லட்சியத்தை எல்லாம் தூக்கிக் கடாசிட்டு புத்திசாலித்தனமா நடந்துக்கப் பார்க்கணும்!''

''அம்மா! வாழப் போறவன் நான்!''

''உன்னைப் பெத்து வளர்த்தவள் நான்!''

''நீங்க நினைக்கிறது நடக்காது.''

''எப்படி நடக்கும்னு எனக்குத் தெரியும், அமுதன். அம்மா உன் நல்லதுக்குத்தான் பண்ணுவேன். நான் நினைச்சபடிதான்

23819



உன் வாழ்க்கை அமையும்... காபி போட்டு எடுத்துட்டு வர்றேன்!''

தமயந்தியின் வார்த்தைகள் ஒவ்வொன்றும் உறுதியாக, தெளிவாக வெளிப்பட்டன.

அமுதன் சங்கடத்துடன் அம்மாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

**கோ**வில் இரண்டு கிலோ மீட்டர் தொலைவில்தான் இருந்தது. ஷேர் ஆட்டோவில் ஏறிக் கொண்டாள் நந்தினி. அடுத்த ஸ்டாப்பிங்கில் ஏறிய வடிவைப் பார்த்துச் சங்கடப் பட்டாள். வடிவு - நந்தினியின் அத்தை. சொக்கலிங்கத்தின் உடன் பிறந்த அக்கா. தமயந்தி அவர்களை அண்டவிடு வதில்லை.

''நந்தினிக் கண்ணு.. நீயா? உன்னை எதிர்பார்க்கவே இல்லை. எவ்வளவு நாளாச்சு, உன்னைப் பார்த்து! எங்கே தனியா?'' வாயெல்லாம் பல் அவளுக்கு.

''கோவிலுக்கு!''

''ஹவுஸ் ஓனர் இங்கதானிருக்கிறார். வாடகைப் பணம் கொடுத்துட்டுப் போக வந்தேன். நீ நல்லாயிருக்கியாம்மா?''

''ம்..''

''வித்யாதரன் எப்பவும் உன்னைப் பத்தித்தாம்மா... விசாரிச்சுக்கிட்டிருப்பான். கடவுள் அனுக்கிரகமிருந்தா... அவன் ஆசைப்படி நடக்கட்டும்..!''

ஆசையுடன், எதிர்பார்ப்புடன் பேசிக் கொண்டிருந்தாள் வடிவு. கோவிலுக்கு வந்த பிறகும் அவள் பேசியதுதான் காதில் ஒலித்துக் கொண்டிருந்தது. அடிப் பிரதட்சணம் பண்ணும்போது வித்யாதரன் கண்களுக்குள் வந்து சிரித்தான். தடுமாறினாள் நந்தினி.

## 4

''நல்ல நேரம் முடியறதுக்குள்ளே வீட்டை விட்டுக் கிளம்பணும். அமுதன் ரெடியாய்ட்டானான்னு பாருங்க!'' பட்டுப் புடவையின் மடிப்பை நீவி விட்டபடி கூறிய தமயந்தியின் குரல் வீடு முழுக்கக் கணீரென்று ஒலித்தது.

மனைவியின் கூற்றைச் சிரமேற்கொண்டு, அடுத்த கணமே காணாமல் போனார் சொக்கலிங்கம். சட்டையின் கையை மடித்துவிட்டபடி அமுதன் வந்தான்.

''என்னப்பா இது?''

''எதும்மா?''

''என்ன சட்டையிது? கலர் நல்லாயில்லே.. வேற மாத்திட்டு வா!''

''இது போதும்... என்ன குறைச்சல் இதுக்கு?'' சுவாரஸ்ய மின்றி வெளிப்பட்டது குரல்.

''சாதாரணமாகவே நல்லா டிரஸ் பண்ணுவே! இன்னைக்கு நாம பொண்ணு பார்க்கப் போகிறோம். இருக்கிறதிலேயே டல் கலரா இருக்கிற இதைப் போய்ப் போட்டுட்டு வர்றியேப்பா! போப்பா.. போய் வேற மாத்திட்டு வா!''

''பிடிச்சா உடும்புப் பிடிம்மா உனக்கு!'' சலித்துக் கொண்டே உள்ளே போனான், அமுதன்.

''நீங்க என்ன அவனையே பார்த்துக்கிட்டு.. பழத் தட்டெல்லாம் டாக்ஸியிலே எடுத்து வைக்கலாம், வாங்க!''

உடனே மனைவியின் பின்னேயே ஓடினார் சொக்கலிங் கம். புறப்பட்ட அமுதனின் கைப்பற்றிக் குலுக்கினாள் நந்தினி.

''ஆல் தி பெஸ்ட்ண்ணா!''

பதிலேதும் கூறத் தோன்றாமல் அவள் கன்னத்தில் செல்லமாய்த் தட்டிவிட்டு கால் டாக்ஸியில் ஏறினான் அமுதன்.



காற்றில் மாவிலைத் தோரணங்கள் அசைந்தாடுவதே மிக அழகாக இருந்தது. சந்தன ஊதுபத்தியின் மணம் வீடு முழுக்க விரவியிருந்தது. கதவு, ஜன்னல்களுக்குப் புதிய திரைச் சீலைகளை அணிவித்திருந்தனர்.

சாதாரண மாடி வீடுதான். அடக்கமாய், நாகரீகமாய் இருந்தது.

''அவங்க வர்ற நேரமாய்டுச்சுங்க.. இன்னும் நீங்க டிரஸ் மாத்தலையா?'' பரபரப்பாய்ச் சுழன்று கொண்டிருந்த ஜெயம் கணவரைப் பார்த்து இன்னும் பதட்டமானாள்.

''டிரஸ் மாத்த எனக்கு ரெண்டு நிமிஷம் போதும். அஸ்வினி ரெடியாய்ட்டாளா? அதைப் பாரு முதல்ல..''

''பையனைப் போட்டோவில் பார்த்தே பூம் பூம் மாடு மாதிரி தலையாட்டினவளாச்சே... ஒரு மணி நேரத்துக்கு முன்னாடியே ரெடியாய்ட்டாளாக்கும்!''

சிவராமன் சிரித்தபடி நகர்ந்தார்.

வீட்டில் அஸ்வினியின் திருமணப் பேச்சு எழுந்தபோது, 'இப்போது எதற்கு? ரெண்டு வருஷம் போகட்டுமே!' என்று மல்லுக்கு நின்றாள்.

'உன் அக்கா ரெண்டு பேருக்கும் பதினெட்டு வயசிலேயே கல்யாணம் பண்ணி மாமியார் வீட்டுக்கு அனுப்பிட்டோம். உன்னை இருபது வயசு வரை விட்டு வச்சதே தப்பு. உனக்கு ஒண்ணும் தெரியாது. வாயை மூடிக்கிட்டு சும்மாயிரு,' என்று அதட்டி வைத்தனர்.

ஒரு நாள் தரகர் கொடுத்த நான்கைந்து வரன்களை அஸ்வினியிடம் காட்டினாள் ஜெயம்.

விழிகள் தெறித்துவிடும் அளவிற்கு ஆச்சர்யப்பட்டாள் அஸ்வினி. அதில் யாரென்று தெரியாமலேயே இதய நரம்பு களை மீட்ட அனுமதித்திருந்தாளே. அவனின் போட்டோவும் இருந்ததுதான் காரணம்.

''பையன் நல்லாதான் இருக்கிறான். ஆனா, அவங்க எதிர்பார்க்கிறது ரொம்ப அதிகமாயிருக்கே! இதோ.. இந்தப் பையன் கூட நல்லாயிருக்கான். காரைக்குடி கோ-ஆப்பரேடிவ் பேங்க்ல நல்ல வேலை. நீயும் பாரு ஜெயம்!''

''வேணாங்க, பையன் கறுப்பாயிருக்கிறான். கடைசிப் பொண்ணு. மத்த ரெண்டு பேரைத்தான் வெளியூர்ல கட்டிக் கொடுத்தோம். இவளுக்காவது உள்ளூர்லேயே பார்ப்போமே! எனக்கும் இந்தப் பையனைத் தான் பிடிசசிருக்கு. கவர்ன்மெண்ட் ஆபீஸ்லே நல்ல வேலை. கை நிறையச் சம்பளம். வசதியான இடமாதான் தெரியுது. நம்ம பொண்ணு பெரிய இடத்திலே வாழ்க்கைப்பட்டா நமக்குத்தானே கௌரவம்? கடன் பட்டாவது கேட்டதைக் கொடுத்துக் கல்யாணத்தை முடிப்போம்!'' என்றாள் விடாப்பிடியாக ஜெயம்.

பெருமூச்சு விட்டார் சிவராமன்.

''புரியாமப் பேசறே... அகலக்கால் வைக்கச் சொல்றே! நம்ம பட்ஜெட் என்னன்னு தெரியாதா உனக்கு?''

''கோர்ட்ல இருக்கிற பங்காளி நிலத் தகராறு கேஸ் நமக்குச் சாதகமாதான் முடியும்னு வக்கீல் சொல்லிட்டாரில்லே? தைரியமா வெளியே வட்டிக்குப் பணம் வாங்கலாம். யாருக்காகக் கஷ்டப்படறோம்? நாம பெத்த பொண்ணுக் காகத்தானே?''

அப்படி இப்படி ஏற்றி இறக்கிச் சம்மதிக்க வைத்து இன்று பெண் பார்க்க வர ஏற்பாடு செய்துவிட்டாள் ஜெயம்.

அஸ்வினிக்கு நெர்வஸாயிருந்தது.

அவருக்கும் என்னைப் பிடிக்கணுமே! பிடிக்குமா? கவலையுடன் ஆளுயரக் கண்ணாடி முன் நின்று ஆராய்ந்தாள்.



குறையில்லா பௌர்ணமி நிலவைப் போல் தகதகவென்று ஜொலித்த தன் உருவத்தைப் பார்த்த பின்புதான் உயிர் வந்தது அவளுக்கு.

ஹாலில் அப்பாவின் பதட்டமும், உற்சாகமுமான குரல் கேட்டது.

''வாங்க.. வாங்க.. சார்.. வாங்கம்மா..''

அஸ்வினியின் இதய ஓட்டம் அதிகரித்தது. 'அவர்க ளெல்லாம் வந்தாச்சு.' டென்ஷனில் வியர்த்தது. அடுத்த பத்தாவது நிமிடம் அஸ்வினி ஹாலுக்கு அழைத்துச் செல்லப்பட்டாள்.

வந்திருப்பவர்களுக்குப் பொதுவாய் நமஸ்கரித்துவிட்டு ஓரக் கண்ணால் அமுதனைப் பார்த்து வெட்கத்தோடு தலை கவிழ்ந்து கொண்டாள்.

''அமுதன்.. பிடிச்சிருக்கா?'' தமயந்தி மகனிடம் கிசுகிசுப் பாய்க் கேட்டாள்.

''ம்'' என்றான் ஒற்றை வார்த்தையில்.

''என் பிள்ளைக்குப் பொண்ணைப் பிடிச்சிருக்கு. உங்க பொண்ணுக்குச் சம்மதமான்னு கேட்டுச் சொல்லுங்க!''

அடுத்த கணம்.. வெட்கத்துடன் எழுந்தோடி விட்டாள் அஸ்வினி. ''எங்க பொண்ணுக்கும் பிடிச்சிருக்கு. மேற் கொண்டு பேச வேண்டியதைப் பேசிடலாமே!'' என்றாள் ஜெயம்.

''ரொம்ப சந்தோஷம்! புதுசா என்ன பேசிடப் போகிறோம்! ஏற்கெனவே தரகர்கிட்டே சொல்லி, அதுக்கெல்லாம் நீங்க சம்மதிச்ச பிறகுதானே வந்திருக்கிறோம்!''

''அதுக்கில்லீங்கம்மா! நகையிலேயும், வரதட்சிணை யிலேயும் பாதியைக் குறைச்சீங்கன்னா...'' என்றிழுத்தார் சிவராமன்.

''ம்ஹூம்.. சான்ஸே இல்லை. வீடு தேடி நூத்துக் கணக்குல என் பையனுக்கு வரன் வந்துக்கிட்டிருக்கு. ஏதோ, பத்துப் பொருத்தமும் அம்சமா பொருந்தியிருக்கிறதாலதான் உங்க வீட்ல சம்பந்தம் பண்ண ஒத்துக்கிட்டோம். என் பையன் நிறையப் படிச்சிருக்கிறான். கை நிறையச் சம்பாதிக்கிறான். அஞ்சு லட்சம் தர்றோம், நூறு பவுன் போடறோம்னு வந்த வரனையெல்லாம் ஒதுக்கிட்டு இங்கே வந்திருக்கிறோம். நாப்பது பவுன் நகை, கையிலே ரெண்டு லட்சம். இதுக்குக் கீழே இறங்கி வர முடியாது. விருப்பம்னா மேற்கொண்டு பேசலாம்!'' என்றாள் கறாராய்த் தமயந்தி.

கூனிக் குறுகிப் போனான் அமுதன்.

தன்னைக் கட்டிப் போட்டு, ஆட்டை விலை பேசுவது போல் தன்னை விலை பேசுவதாய் உணர்ந்தான். உடல் முழுக்கப் புழுக்கள் நெளிகிற உணர்வு.

பயப்படாத மனிதன் உண்டு. ஆனால், வெட்கப்படாத மனிதனாய் இருக்க முடியாது.

அங்கே அமர்ந்திருப்பதே வெட்கமாய் இருந்தது.

ஜெயம் தன் கணவனைப் பின்கட்டுக்கு அழைத்துச் சென்று எரிந்து விழுந்தாள்.

''அவ்வளவு தூரம் படிச்சுப் படிச்சுச் சொல்லியும், கெடுத்துடுவீங்க போலிருக்கே! பையன் பாந்தமா அழகா யிருக்கிறான். அஸ்வினிக்கும் ரொம்ப பிடிச்சிருக்கு. வசதியான இடம். யாருக்குச் செய்யறோம்? நம்ம பொண்ணுக்குத் தானே! நாம போடற நகையைப் போட்டு அழகு பார்க்கப் போறது நம்ம பொண்ணுதானே! அந்தம்மா கறாரா இருக்கிறாங்க.. பேசாம ஒத்துக்குங்க!''

''ஒத்துக்கறது பெரிசில்லே, ஜெயம். செய்யணுமே? இப்பல் லாம் லட்சக் கணக்கில் யாரும் கடனா கொடுக்கிறதில்லே!''



''வட்டிக்கு ஆசைப் படாதவங்க யாரிருக்காங்க? எல்லோரும் கையிலே பணத்தை வச்சுக்கிட்டுக் கல்யாணம் பேசறதில்லை. கடன்கிடன் பட்டுத்தான் முடிப்பாங்க. எல்லோருக்கும் உண்டானதுதான் நமக்கும். அவங்க கேட்கறதைச் செய்யறோம்னு ஒத்துக்குங்க.. போங்க!''

சிவராமன் அரை மனதுடன் நகர்ந்தார்.

கலர் கலராய்... அழகழகாய் மீன்கள். மீன் தொட்டி யினருகே அமர்ந்திருந்த அமுதன் அதையே பார்த்துக் கொண்டிருந்தான். 'என்னதான் துள்ளிக் குதித்து நீந்தினாலும், அவைகளின் எல்லை அந்தத் தொட்டி வரைக்கும்தானே?'

என்னைப் போலவே!

தன்னிச்சையாகச் செயல்பட முடிகிறதா என்னால்? அம்மா போட்ட குறுகிய வட்டத்திற்குள் அல்லவா சிக்குண்டு தவிக்கிறேன்?

பள்ளி, கல்லூரி மேடைகளில், ''வரதட்சிணையே வாங்க மாட்டேன் ஏழைப் பெண்ணொருத்தியைத்தான் மண முடிப்பேன் என்று பேசிக் கைதட்டலை வாங்கியவனை பேச்சில் மட்டுமல்ல, செயலிலும் காட்ட வேண்டும் என்று நினைத்திருந்தவனை.. அம்மா தன் வீம்பால் செயலிழக்க வைத்துவிட்டாள்.

'அந்தப் பெண்ணை ஆண்மையுடன் நிமிர்ந்து பார்க்க முடியவில்லையே என்னால்! மனசிலேயே பதியவில்லையே!' மருகினான்.

''அண்ணா... இந்தாண்ணா... பாயசம்!'' நந்தினி எதிரே வந்து நின்றாள்.

''என்ன நந்தினி விசேஷம்? பாயசமெல்லாம் அமர்க் களப்படுது!''

''எல்லாம் உனக்காகத்தான். கல்யாணம் முடிவாய்டுச்சில்லே? அதைக் கொண்டாடத்தான் அம்மா செய்தாங்க!''

வாங்கிச் சுவைத்தவனுக்கு ஏனோ கசந்தது.

## 5

''கங்க்ராஜுலேஷன்ஸ், அமுதன்!''

'எதற்காக?' என்பதுபோல் தன் சக ஊழியரைப் பார்த்தான் அமுதன்.

''மேரேஜ் ஃபிக்ஸ் ஆகிட்டதாமே? கேள்விப்பட்டேன். அட்வான்ஸ் வாழ்த்துக்கள்!'' என்றான் வாசன்.

'தேங்க்ஸ்!' என்று கூடச் சொல்ல மனம் வராமல் சிரித்தபடி நழுவினான்.

''வசதியான இடமா?''

''அப்படி யெல்லாம் ஒன்றுமில்லை. ஜி.எம். கூப்பிட்டதா அட்டெண்டர் வந்து சொல்லிட்டுப் போனான். நான் போகணும்!'' வலுக் கட்டாயமாய்த் தன்னை அந்தச் சூழலிலிருந்து பிய்த்துக் கொண்டு போனான்.

''வசதியான இடமா?''

'என்ன கேள்வி யிது? மனிதர்களில் பெரும்பாலோர் இப்படித்தான் இருக்கிறார்கள். 'பெண் குணவதியா? நல்ல குடும்பமா?' என்ற அத்தியாவசியக் கேள்விகள் எழுவதில்லை.

வாசனும், அமுதனும் ஒரே கேட்டகரிதான். அவனும் திருமணமாகாதவன். இவனுக்குக் கிடைத்ததை விட ஒருபடி மேலே நமக்குக் கிடைக்க வேண்டும் என்கிற ஆசை.

தகுதிக்கு மேற்பட்டவர்களோடு மனிதன் தன்னை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, ஒன்று - மகிழ்ச்சியடைகிறான் அல்லது பொறாமை கொள்கிறான். ஒப்பிட்டுப் பார்க்காத வரையில் எதிலும் நல்லது கெட்டது என்பதே தெரிவதில்லை.



'சரி.. வாசனைக் குறை சொல்வதில் என்ன இருக்கிறது? நீ நினைக்கிற ஆள் நானில்லை!' என்று காலரைத் தூக்கி விட்டுக் கொண்டு பேச முடிகிறதா என்னால்?' மனம் தொய்ந்து போனது.

அலுவலகம் முடிந்து தன் ஸ்ப்ளெண்டரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தான் அமுதன். இடதுபுற வளைவில் வண்டியைத் திருப்பியவன் வியப்புடன் பிரேக் போட்டான்.

வித்யாதரன்தானே அது?

அவன்தான்!

அது முக்கூட்டு ரோடு. மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள பகுதி. நடமாடும் இஸ்திரி வண்டி போல்.. ஒரு வண்டியை வைத்து நடமாடும் ஃபாஸ்ட்ஃபுட் கடையை நடத்தி வந்தான் வித்யாதரன். அமுதனின் அத்தை மகன்.

பைக்கை ஓரமாய் நிறுத்தி வைத்துவிட்டு, அவனருகே சென்று தோளில் கை வைத்தான்.

காய்கறிகளை வெட்டுவதும், நூடுல்ஸைப் பிரித்துக் கொட்டுவதுமாய் பிஸியாய் இருந்த வித்யாதரன், ''உங்களுக்கு என்ன சார் வேணும்?'' என்று திரும்பியவன், ஆச்சர்யமானான்.

''அ..மு.. த..ன்..!''

''இங்கே என்ன பண்ணிட்டிருக்கே வித்யா?''

''என்ன புதுசாக் கேக்கறே? இந்தத் தொழிலை ரெண்டு வருஷமா செய்துக்கிட்டிருக்கேனே!''

''அதைக் கேக்கலே.. சாஸ்திரி நகரை விட்டு இந்த ஏரியாவிலே எப்படி? ஏன் அங்கே சரியா பிசினஸ் இல்லையா?''

''என் கைப்பக்குவத்துக்குக் கூட்டமே இல்லாத இடத்தில் கூட பிசினஸ் பண்ணிடுவேன். அந்த ஏரியாவுல கரண்ட்,

டெலிபோன், குடிநீர்னு அங்கங்கே பள்ளம் தோண்டி குப்பை சேர்ந்து போச்சு. சுகாதாரக் கேடு, அங்கே சமைச்சு விக்க மனசு வரலே! ரோடு போடற வரைக்கும் இங்கேதான்! இந்தாங்க சார்..'' பேசிக் கொண்டே வியாபாரத்தைக் கவனித்தான்.

சுத்தமான கைப் பக்குவத்திற்காகவும், ருசிக்காகவும் ரெகுலர் கஸ்டமர்கள் சேர்ந்திருந்தனர். கையில் தட்டை ஏந்தி நிறையப் பேர் சாப்பிட்டுக் கொண்டிருந்தனர்.

அமுதன் அவனைப் பெருமிதமாய்ப் பார்த்தான்.

'எப்பேர்ப்பட்ட இளைஞன்! நம்பிக்கையும், தைரியமும் அவன் கண்களில் வைரங்களாய் ஒளிர்கிறதே. ஏழை என்பதைத் தவிர இவனிடம் வேறென்னம்மா குறை கண்டாய்?' அம்மா மீது கோபம் வந்தது.

தந்தையில்லாத குடும்பத்தின் தலைவன் அவன். விதவை அக்கா ஒருத்தி உண்டு. அவளுக்கு இரண்டு குழந்தைகள். எல்லோரையும் வித்யாதரன்தான் காப்பாற்றி வருகிறான்.

எம்.காம். படித்த வித்யாதரன் ஆரம்பத்தில் வேலைக்காக கம்பெனி கம்பெனியாக ஏறி இறங்கி, கடைசியில் சுயமாய் வேலை தேடிக் கொண்டான். ஃபாஸ்ட் ஃபுட் கடை வைத்ததற்காக வித்யாதரன் என்றுமே வருத்தப்பட்டதில்லை. கஷ்டப்பட்டால் இதையே பெரிய ஹோட்டலாய் உருவாக்க லாம் என்பது அவனின் நம்பிக்கை.

வித்யாதரனுக்கு நந்தினி மீது கொள்ளை ஆசை. முறைப் பெண் ஆயிற்றே! அந்த தைரியத்தில் தம்பியின் வீடு தேடிப் போய்ப் பெண் கேட்டாள் வடிவு.

சாமியாடி விட்டாள் தமயந்தி.

''யாருக்கு? சட்டி பானையைக் கழுவிக்கிட்டு.. பொம்பளை மாதிரி சமைச்சுக்கிட்டு தெருத் தெருவா வண்டியைத் தள்ளிக்கிட்டு வயித்துப் பொழப்பை நடத்தற ஒரு



சமையல்காரனுக்கா என் பொண்ணைக் கொடுக்கச் சொல்றே? இதையே வேற யாராவது வந்து கேட்டிருந்தா வாயால பதில் சொல்லிக்கிட்டிருக்க மாட்டேன்!''

''என் பிள்ளைக்கு என்ன குறைச்சல், தமயந்தி? முறைப் பையன், அழகு, படிப்புன்னு எதிலேயும் குறையில்லே. ரொம்ப ஆசைப்படறான்... தம்பி, நீயாவது எடுத்துச் சொல்லேன்!''

''அவரை ஏன் இழுக்கறீங்க? பத்து மாதம் சுமந்து பெத்தவ நான். என் பொண்ணுக்கு எந்த மாதிரி வாழ்க்கையைத் தேடித் தரணும்னு எனக்குத்தான் தெரியும். என் பொண்ணு அழகுக்குப் பெரிய இடமெல்லாம் வரிசை கட்டி நிக்குது. உங்க தகுதிக்கு ஏத்த மாதிரி ஆசைப்படக் கத்துக்குங்க.. இந்த மாதிரி ஆசையெல்லாம் வச்சுக்கிட்டு இனி யாரும் என் வீட்டுப் படியேற வேண்டாம்!'' முகத்திலடித்தாற்போல் சொல்லி அனுப்பிவிட்டாள்.

சொக்கலிங்கம் வாயே திறக்கவில்லை.

அமுதன்தான் கத்தினான்.

''என்னம்மா ஆச்சு உனக்கு? ஏன் இப்படியெல்லாம் நடந்துக்கறே? வித்யாதரன் ஆசைப்படறதை விடு. நானே நம்ம நந்தினியை வித்யாவுக்குக் கட்டித் தரணும்னு ஆசைப்பட்டேன்!''

''நீயுமா பிச்சைக்காரத்தனமா ஆசைப்படுவே?''

''ஏன், வித்யாவுக்கு என்ன குறைச்சல்? நந்தினியைச் சந்தோஷமா வச்சுக்குவான்... அது போதாதா?''

''என்னப்பா பெரிய சந்தோஷம்? என் பொண்ணு நாத்தனார், ஓரகத்தின்னு எந்தப் பிக்கல் பிடுங்கலும் இல்லாத வசதியான இடத்திலே வாழ்க்கைப் படணும்னு ஆசைப் படறேன். உன் அத்தை பொண்ணு அறுத்துக்கிட்டு ரெண்டு

பிள்ளைகளோட வந்து தம்பியே கதின்னு செட்டிலாய்ட்டா. அந்த ரெண்டு குழந்தைகளை வளர்த்து ஆளாக்கி, கல்யாணம் பண்ணிக் கொடுக்கறது வித்யாவோட கடமைதானே! அந்த வீட்லே என் பொண்ணைக் கூடச் சேர்ந்து வண்டியைத் தள்ளிக்கிட்டு போகச் சொல்றியா?''

''செய்யற தொழிலைக் கேவலமா பேசாதேம்மா. இந்த வயசுல பெரிய பொறுப்பைச் சுமந்திட்டிருக்கிற வித்யாவை நினைச்சுப் பெருமைப்படணும். நந்தினிக்காகச் சேர்த்து வச்சிருக்கிற பணத்தை வித்யாவோட பிஸினசுக்குக் கொடுத்து உதவினா... அவன் உழைப்புக்கு, திறமைக்கு ரெண்டு ஹோட்டலையே உருவாக்குவான்.''

''வேணாம் அமுதன்.. இந்தப் பேச்சை இத்தோட விட்ரு.. நான் நந்தினிக்கு மாப்பிள்ளை பார்த்தாச்சு.''

''மாப்பிள்ளை பார்த்தாச்சா?'' அமுதன் மட்டுமல்ல, சொக்கலிங்கமும் வாயைப் பிளந்தார்.

''ஆமாம். நான் எப்படியெல்லாம் கற்பனை பண்ணி வச்சிருந்தேனோ, அதே மாதிரி வரன். பையன் என்ஜினியர். ஒரே பிள்ளை. திருவான்மியூர் ஜர்னலிஸ்ட் காலனியிலே ஃப்ளாட்டுன்னு வசதியான இடமாக்கும்.''

''என்ஜினியர்ங்கறே.. ரொம்ப எதிர்பார்ப்பாங்களே!'' தைரியமாய் ஒரு கேள்வியைக் கேட்டார் சொக்கலிங்கம்.

''இந்தக் காலத்திலே சாதாரண அட்டெண்டர் வேலை பார்க்கிறவன் கூடப் பெரிய லிஸ்ட் தர்றான். என்ஜினியர்... எதிர்பார்க்க மாட்டாங்களா? அம்பது பவுன் நகை போட்ருங்க, வரதட்சிணைன்னு எதுவும் வேணாம். ஒரு கார் மட்டும் வாங்கிக் குடுத்துடுங்கன்னு சொல்லிட்டாங்க.''

''காரா? என்னம்மா விளையாடறியா? காருக்கு எங்கே போவே? சிம்பிளா பார்த்தாக் கூட அஞ்சாறு லட்சம் ஆகுமே!''



''தெரியும். உன் தங்கச்சி மேலே அக்கறை இருந்தா.. இப்படிக் கேப்பியா?''

''ஏன்.. எனக்கில்லையா? யோசிக்காம கோட்டை கட்டாதேன்னுதான் சொல்றேன்.''

''எல்லாம் நம்மால முடியும். பேங்கிலே இருக்கிற பணம், உன் ஆபீஸ்லே லோன் போட்டு வர்ற பணம் எல்லாம் சேர்த்தா மூணு லட்சம் வரும்!''

''மீதிப் பணத்துக்கு!''

''அதுக்கும் ஒரு ஐடியா வச்சிருக்கேன்!''

''என்ன?''

''உடனடியா ஒரு கல்யாணத்தை நடத்தறதுதான்!''

''என்ன?'' என்று அதிர்ந்து போனான் அமுதன்.

அமுதனுக்குக் கல்யாணம் பண்ணி, மருமகள் மூலமாக வருகிற நகை, பணத்தை வைத்துத் தன் மகளின் கல்யாணத்தை நடத்தி விட வேண்டும் என்பது திட்டம்.

அமுதன் விடாப்பிடியாக மறுத்தான். 'எனக்கு மனைவியாக வருபவளிடம் சல்லிக் காசு கூட வாங்க மாட்டேன்!' என்று பிடிவாதம் பிடித்தான்.

தமயந்தி விடவில்லை. கடைசியாய் எல்லாப் பெற்றோர்களும் பயன்படுத்தும் தற்கொலை அஸ்திரத்தை எடுத்து வீசி... அமுதனின் வாயை அடைத்தாள்.

''வீட்லே எல்லோரும் நல்லாயிருக்காங்களா, அமுதன்?''

''ம்.. அத்தை எப்படியிருக்காங்க?''

''நல்லா யிருக்காங்க!''

''நாளை காலையிலே ஒன்பது மணிக்கு வீட்டுக்கு வர்றேன்..'' என்றான் அமுதன்.

''சந்தோஷம்! வா.. அம்மாகிட்டேயும், அக்காகிட்டேயும் பேசிட்டுப் போ.. நான் இருக்க மாட்டேன்!''

''ஏன் வித்யா? ஈவ்னிங்லதானே ஃபாஸ்ட் ஃபுட் சமாச்சாரமெல்லாம்?''

''காலைலேர்ந்து ரெண்டு மணி வரைக்கும் டிபன் சாப்பாடு கடை நடத்தறேன். பல்லவன் ஹவுஸ் பக்கம் வந்தியானா.. அந்த டைம்ல என்னைப் பார்க்கலாம்!''

'ஓய்வேயில்லாம உழைக்கறியே, வித்யா!' இரக்கத்துடன் பார்த்தான்.

''நம்மால முடியறப்பல்லாம் உழைக்கணும். சேமிக்கணும். வைகறை அருணோதயம் நாள் முழுக்கத் தங்கியிருப்ப தில்லையே! மழைக் காலத்தில் பிஸினஸ் டல்லடிக்கலாம் இல்லையா?'' என்றான் அழகாகச் சிரித்தபடி.

'அறிவும், உழைப்பும் பணக்காரர்களின் ஆபரணம். ஏழைகளுக்குச் செல்வம்!' நந்தினிக்கு வித்யா கிடைக்கக் கொடுத்து வைக்கவில்லை.' ஏக்கத்துடன் விடைபெற்றான்.

திருமணத்திற்கு இன்னும் ஒரு மாதம்தான் இருந்தது. அமுதனின் மனசு எதிலும் லயிக்கவில்லை. கொலையைப் பண்ணிவிட்டுத் தலைமறைவு வாழ்க்கை வாழ்வதைப் போல் குற்ற உணர்வில் ஆட்பட்டிருந்தான்.

கோவிலுக்குப் போய் வந்தால் தேவலை என்பது போலிருந்தது. அங்காளம்மாள் கோவிலுக்குச் சென்றான். குளக்கரையில் அமர்ந்து பாசி படர்ந்த பச்சைத் தண்ணீரில் துள்ளியோடும் மீன்களையே பார்த்துக் கொண்டிருந்தான். ஒரு கையில் அர்ச்சனைக் கூடையும், இன்னொரு கையில் பொரிப் பொட்டலுமுமாய்க் குளத்துப் படிக்கட்டில் இறங்கி வந்த அஸ்வினி, இவனைப் பார்த்துவிட்டாள். சந்தோஷத்தில் ஒரு கணம் மூச்சுவிட மறந்தாள்.



## 6

'என்னவன்.. இன்னும் ஒரு மாதத்தில் என் கரம் பிடிக்கப் போகிற மணமகன்.. பரவாயில்லை. என்னைப் போலவே இவருக்கும் தெய்வ பக்தி இருக்கிறது.'

கைகளை முன்புறமாய் வைத்து அமர்ந்திருந்ததால்... பரந்து விரிந்த அவனின் முதுகு சட்டையை மீறித் தெரிந்தது.

அஸ்வினி வாரம் தவறாமல் இந்தக் கோவிலுக்கு வரும் பழக்கமுடையவள். அமுதனை இங்கு சற்றும் எதிர்பார்க்க வில்லை. இப்போதும் கூட அவன் பெயருக்கும் தன் பெயருக்குமாகச் சேர்த்துத்தான் அர்ச்சனை பண்ணிவிட்டு வருகிறாள்.

அவனிடம் பேச வேண்டும் என்று மனம் கொள்ளா ஆசை! பெண் பார்க்க வந்தபோது, பெண்ணிடம் ஐந்து நிமிடம் பேச வேண்டும் என்று அனுமதி பெற்றுத் தனியே தன்னிடம் பேசுவான் என்று எதிர்பார்த்தாள். கடைசிவரை அப்படியொரு கோரிக்கையே வைக்கவில்லை.

சரி.. அதான் போகட்டும். வீட்டில்தான் போன் இருக்கிறதே! பண்ணினால் என்ன குறைந்துவிடும்? திருமணத்திற்கு முன் வருங்கால மனைவியிடம் மனம் விட்டுப் பேசுவதும், திருட்டுத்தனமாய்ச் சந்திப்பதும் இளமனசின் ஏக்கங்கள் அல்லவா? ஏன் இப்படி இருக்கிறார்? நான் தவறாக நினைத்து விடுவேன் என்று தவறாகப் புரிந்து கொண்டாரா?

அஸ்வினிக்கு அமுதனின் ஆபீஸ் நம்பர் தெரியும் என்றாலும் தானே வலிய போன் பண்ணுவதை அவர் தப்பாக நினைத்துவிட்டால்? அந்தப் பயத்திலேயே இதுநாள் வரை பேசவில்லை.

ஆனால், இன்று விடுவதாயில்லை.

அஸ்வினிக்கு அசுர தைரியம் வந்துவிட்டது.

மெல்லப் படியிறங்கினாள்.

அப்போது.. அவளுக்கு வலப் பக்கமாய் ஒரு இளைஞன் வேகமாய் இறங்கி, 'டேய் அமுதா..!' என்றான்.

திரும்பிய அமுதனின் கண்களில் புன்னகை.. ''அட.. செந்தில்.. வா.. வா..!''

''இங்கே என்ன பண்ணிட்டிருக்கே?''

''ம்.. மீன் பிடிச்சிட்டிருக்கேன்!'' என்றான் கிண்டலாக.

'சரியான கரடி!' செந்திலை மனதிற்குள் சபித்தபடி அங்கேயே நின்று விட்டாள் அஸ்வினி.

''என்னடா டல்லாயிருக்கே?''

''இல்லையே.. நல்லாதானே யிருக்கேன்!''

''வாய்தான் சொல்லுது... முகம் சரியில்லையே!''

''அது எப்பவும் அப்படித்தான்!''

''ஓகோ... காலேஜ்ல படிக்கிறப்ப பொண்ணுங்களெல்லாம் போட்டி போட்டுக்கிட்டு லவ் லெட்டர் அனுப்பினாங்களே.. அது எந்த முகத்துக்காகவாம்?''

''ப்ச்.. பழைய கதையெல்லாம் இப்ப வேணாம். உன் பிஸினஸ் எப்படிப் போய்ட்டிருக்கு?''

''சுமார்தான்.. நாட்லே பணப் புழக்கம் குறைஞ்சு போச்சு.. கொஞ்சம் டல்லடிக்குது.. அதைவிடு.. என்னாச்சு? எப்பவும் சுறுசுறுப்பா எதையாவது ஒரு வேலை செஞ்சுக்கிட்டே இருப்பியே..! கோவில் பக்கம் ஒதுங்காதவன் இப்படி வந்து விசனமா உட்கார்ந்திருக்கே! என்ன பிரச்சினை... என்கிட்டே சொல்லக் கூடாதா?''



''...?''

''கல்யாணம் நிச்சயமான மாப்பிள்ளைக்கு என்ன வருத்தம்?'' செந்தில் விடுவதாயில்லை. அது அவனின் குணம். தெரிந்து கொள்ளாதவரை தூக்கம் வராது.

அமுதன் பெருமூச்சு விட்டான்.

''கல்யாணம்தான் பிரச்சினையே!'' என்றான்.

''என்னடா சொல்றே?'' - செந்தில் திடுக்கிட்டான்.

''இந்தக் கல்யாணத்தில் துளியும் இஷ்டமில்லை, செந்தில்!''

தன் பாரத்தின் அடியிலிருந்த பூமி நழுவினாற் போல் ஆடிப் போனாள் அஸ்வினி.

''ஏன்டா? பொண்ணைப் பிடிக்கலையா? அழகா யில்லையா?''

''உலகில் ரொம்ப அழகான பொருட்கள் எல்லாம் சிறிதும் பயனில்லாதவை என்பதில் மாறாத கருத்துடையவன் நான். அது உனக்கே தெரியும். பிரச்சினை அதுவல்ல!''

''பின்னே?''

''பணம்.. பணத்துக்காக.. பொண்ணு வீட்ல தர்ற வரதட்சிணைக்காகத்தான் இந்தக் கல்யாணத்துக்கு கிட்டத்தட்ட ஒரு வேசியோட மனநிலையில் ஒப்புக்கிட்டேன்!'' என்றான் வெறுப்பாய்.

செந்தில் அவன் தோளில் கைபோட்டு, ஆறுதலாய்த் தட்டிக் கொடுத்தான்.

''சொத்தையான விதையைப் போட்டுட்டு முளைக்க வில்லையேன்னு வருந்தறவன் படு முட்டாள். வாழ்க்கை வாழப் போறது நீ! பிடிக்கலேன்னா பிடிக்கலேன்னு சொல்ல வேண்டியதுதானே?''

''முடியலேடா.. அம்மா கிட்டத்தட்ட மிரட்டினாங்க.. அதனால்தான் தலையாட்டினேன். என்னைப் பத்தி உனக்குத் தெரியும்... என் மனசு எப்படிப்பட்டதுன்னு..''

''உன்னை நினைச்சா சிரிப்புதான்டா வருது. பிறர் குற்றங்களை நம் கண்முன் வைத்துக் கொள்கிறோம். நம் குற்றங்களை நம் பின்புறம் வைத்துக் கொள்கிறோம். உனக்குத் தைரியமில்லேன்னு சொல்லு. அதை விட்டுட்டு அம்மா மிரட்டினாங்க, ஆட்டுக்குட்டி மிரட்டினாங்கன்னு பாட்டுப் பாடாதே! என் கல்யாணம் எப்படி நடந்ததுன்னு உனக்குத் தெரியாததல்ல. வசதியான குடும்பத்தில் பிறந்த ஒரே பிள்ளை. ஷகிலா பானுவை உயிருக்குயிரா காதலிச்சேன். வேற மதம்ங்கறதால வீட்லே ஒப்புக்கலே. அதுக்காக அவளைக் கைவிட்டுடலியே! என்னை நம்பினவளைத் தூக்கியெறிய.. நான் துரோகியல்ல. எதிர்ப்புகள் வரும்னு தெரிஞ்சுதானே லவ் பண்ணினேன்? ரிஜிஸ்டர் மேரேஜ் பண்ணிக்கிட்டோம். ரெண்டே மாசம்தான்.. ஒதுங்கியிருந்த அம்மா அப்பா வெல்லாம் நெருங்கி வந்துட்டாங்க. இதுதான்டா வாழ்க்கை. நாய் நம்மை விரட்டி வருதேன்னு ஓடிக்கிட்டே இருந்தா.. பாதைக்கு முடிவேயில்லே. தைரியமா ஒரு கல்லை அதுமேலே எறிஞ்சி பாரு.. நீ அதை விரட்டிக்கிட்டு ஓடலாம். அவரவர் வாழ்க்கை அவரவர் கையிலேதான். மனச்சாட்சியை விரோதிச்சுக்கிட்டு வாழற வாழ்க்கையிலே நிம்மதி வராது. எனவே... நடந்தது நடந்து போச்சு. பழசையே நினைச்சிட்டி ருக்காதே! ஆக வேண்டியதைப் பாரு!''

இவையனைத்தையும் கேட்டுக் கொண்டிருந்த அஸ்வினி எரிமலையாய் உள்ளுக்குள் வெடித்துச் சிதறிக் கொண்டி ருந்தாள்.

உயிரற்ற சடலம் போல் படியேறிப் போய்விட்டாள்.



''ஒரு லட்சியவாதியாய் வாழ்ந்து காட்டணும்னு ஆசைப்பட்டேன், செந்தில். காலம் முழுக்க எனக்காகவே வாழப் போகிறவளுக்கு நானல்லவா வெகுமதி தரணும்? அவகிட்டேயே கை நீட்டி, பணம் வாங்கி.. சே.. ரொம்ப அசிங்கமாயிருக்கு, செந்தில்!''

''சரி விடு, உனக்கு வசதி வாய்ப்பு வரும்போது.. உன் மனைவிக்கு நூறு மடங்கா திருப்பிக் கொடு! டைமாய்டுச்சு.. ஷகிலா காத்துக்கிட்டிருப்பா.. நான் வரட்டுமா?'' புறப்பட்டான் செந்தில்.

உடல் அனலாய்க் கொதித்தது அஸ்வினிக்கு.

''பணத்துக்காகத்தான்.. இந்தக் கல்யாணத்துக்கு ஒப்புக்கிட்டேன்!''

ஆயிரம் முறையாவது இந்த வார்த்தை அவளுள் ஒலித்துச் சித்ரவதை பண்ணிக் கொண்டிருந்தது.

என்னை நிமிர்ந்து பார்த்துப் பிடிச்சிருக்குன்னு தலை யாட்டின தெல்லாம்.. பணத்துக்காகத்தானா? சே.. இப்படிப் பட்டவனையா நல்லவன்னு நம்பினேன்? நினைத்து நினைத்துக் கனவு கண்டு சிலிர்த்தேன்... நேசித்தேன்?

எவளையாவது காதலித்து, வீட்டில் சம்மதிக்காததால் அம்மாவின் பேராசைக்காக, ரெண்டு லட்சத்திற்காக என்னை மணக்கத் தலையாட்டியிருக்கிறான்! அவளால் அந்த ஏமாற்றத்தைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

நினைக்கவே அசிங்கமாக இருந்தது. அவன் மீது அதுவரை வைத்திருந்த காதலெல்லாம் கனலாய் மாறியது. ஏமாற்றப் பட்டதுபோல் நெஞ்சு காந்தியது. ஒரு கட்டத்திற்கு மேல் தாங்க மாட்டாமல் வாய்விட்டுக் கதறி அழுதாள் அஸ்வினி.

நடந்த விஷயம் எதையும் அவள் வீட்டில் சொல்லவில்லை. அவர்கள் பாட்டிற்குத் திருமண ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தனர்.

இத்தனை நாட்களில் ஒரு நாள் கூட அமுதன் அஸ்வினிக்குப் போன் பண்ணவில்லை. அதுவேறு அவளைப் போட்டு அழுத்திற்று.

அன்று...

சோர்ந்துபோய் வீடு திரும்பினார் சிவராமன். உள்ளே வந்ததும் ஈஸி சேரில் சாய்ந்து கண்களை மூடிக் கொண்டார்.

யதேச்சையாக உள்ளறையிலிருந்து ஹாலுக்கு வந்த ஜெயம் ஆச்சர்யப்பட்டாள்.

''அட.. நீங்க எப்ப வந்தீங்க? வந்ததே தெரியலே... உங்களுக்காகத்தானே காத்துக்கிட்டிருந்தேன். போன காரியம் என்னாச்சு? பணம் குடுத்துட்டாங்களா?''

சிவராமன் அமைதியாக இருந்தார்.

அஸ்வினி அங்கு வந்தாள்.

''என்னங்க... கேட்டுக்கிட்டேயிருக்கேன்.. பேசாம இருந்தா என்ன அர்த்தம்?''

''பணம் கிடைக்கலே ஜெயம்!'' குரலடைக்கச் சொன்னார் சிவராமன்.

''எ... என்ன சொல்றீங்க?'' திகைத்து விட்டாள்.

''ஆமாம்.. கடைசி நேரத்திலே இல்லேன்னு கையை விரிச்சிட்டான்.''

''ஐயோ... தர்றேன்னு நம்பிக்கையா சொன்னானே, படுபாவி!''



''அவனை ஏன் திட்டறே? அவன் பணம்.. பாதுகாப்பா வச்சுக்கணும்னுதான் ஆசைப்படுவான். ஒண்ணரை லட்சமாச்சே? சட்ட திட்டம் கடுமையாயிருக்குங்க. மீட்டர் வட்டி, கந்துவட்டின்னு கேஸ் போட்டு உள்ளே தள்றாங்க. நான் ரெண்டு ரூபா வட்டி வாங்கினாலும் நீங்க மனசு மாறி எக்குத்தப்பா கம்ப்ளைண்ட் கொடுக்க மாட்டீங்கன்னு என்ன நிச்சயம்? கடைசியிலே பணம் கொடுத்தவன்தான் தலையிலே துண்டு போட்டுக்கிட்டு உக்காரணும். மன்னிச்சுக்குங்க.. வேற ஆளைப் பார்த்துக்குங்கன்னுட்டார்.. எவ்வளவோ கெஞ்சிப் பார்த்தேன். உறுதியா மறுத்துட்டார்!''

''இப்ப என்னங்க பண்றது? கல்யாணத்துக்கு இன்னும் பத்து நாள்தானே இருக்கு?''

''நான் ஒண்ணு சொன்னா கேப்பியா? பேசாம இந்தக் கல்யாணத்தை நிறுத்திடலாம்!''

''ஐயோ! என்ன பேச்சுப் பேசறீங்க?''

''நம்ம சக்திக்குத் தகுந்த இடத்திலே மாப்பிள்ளை பார்க்கலாம், ஜெயம்!''

ஜெயம் பதிலேதும் கூறாமல் விசும்ப ஆரம்பித்தாள்.

''அப்பா!'' அஸ்வினி அவர் முன் வந்து நின்றாள்.

அவளை நிமிர்ந்து பார்க்கவே சங்கடமாயிருந்தது, சிவராமனுக்கு.

''அப்பா.. நான் சொல்வதைக் கேப்பீங்களா?''

''என்னம்மா?''

''நீங்க மேற்கொண்டு கல்யாண ஏற்பாட்டைப் பண்ணுங்கப்பா!''

''எ.. எப்படிம்மா?''

''இருக்கறதை வச்சுச் சமாளிச்சுக்கலாம். மத்ததை கல்யாணத்தன்னைக்கு நான் பார்த்துக்கறேன்.. நீங்க தைரியமா ஏற்பாடு பண்ணுங்க!''

அஸ்வினி நம்பிக்கையுடன் சொல்ல.. சிவராமனும், ஜெயமும் அவளை ஆச்சர்யத்துடன் பார்த்தனர்.

## 7

திருமண மண்டபம் களைகட்டத் தொடங்கியது.

சிவராமனும், ஜெயமும், திக் திக் இதயத்துடன் நடமாட.. அஸ்வினியோ எவ்விதப் பதட்டமுமின்றி மணப் பெண்ணுக் குரிய அடக்கத்துடன், அலங்காரம் செய்து கொண்டிருந்தாள்.

அறைக்குள் வந்தாள் தமயந்தி. அஸ்வினியின் கன்னத்தில் செல்லமாய்த் தட்டியவள், ''எங்கேம்மா உங்கம்மா?'' என்றாள்.

''வாங்க சம்பந்தியம்மா!'' என்றபடி ஜெயம் உள்ளே நுழைய, அவள் பின்னேயே சிவராமனும் வந்தார்.

''முகூர்த்தத்துக்கு இன்னும் ஒரு மணி நேரம்தான் இருக்கு. எல்லாம் ரெடியாயிருக்கா?''

''ம்.. இதோ.. இன்னும் அஞ்சு நிமிஷத்திலே அஸ்வினி ரெடியாய்டுவா!''

''நான் அவளைச் சொல்லலே.. சீர் வகையெல்லாம் பார்த்தேன். குக்கர் ஐட்டம் ரொம்ப குறைச்சலாயிருக்கு.. பரவாயில்லை. விடுங்க. நேத்தே தருவீங்கன்னு எதிர்பார்த்தேன்!''



''எ.. எதை..?''

''ரெண்டு லட்சம்!''

சிவராமனும், ஜெயமும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டனர்.

''என்ன.. ரெண்டு பேரும் மௌனமாயிருக்கீங்க?''

''அதில்லே.... வந்து கேட்ட இடத்திலே கடைசி நேரத்திலே கையை விரிச்சிட்டான். இப்போதைக்கு எங்க கையிலே அம்பதாயிரம்தான் இருக்கு!''

''எ..என்னது?''

''மீதி ஒண்ணரை லட்சத்தை இன்னும் ஒரு மாசத்திலே எப்படியாவது ஏற்பாடு பண்ணி...''

''நிறுத்துய்யா... மீசை வச்ச ஆம்பளை மாதிரியா பேசறே?'' வெடித்தாள் தமயந்தி.

''சம்பந்தியம்மா... மரியாதை யில்லாம பேசாதீங்க!''

''உனக்கெதுக்குய்யா மரியாதை? வெள்ளையும் சள்ளையுமாய் மாட்டிக்கிட்டு இந்த வாயாலதானே அன்னைக்குச் சபையிலே ரெண்டு லட்சம் தர்றதா ஒத்துக்கிட்டே? பணம் கிடைக்கலேன்னா... முன்னாடியே சொல்ல வேண்டியதுதானே! கல்யாணத்தன்னைக்குச் சொன்னா.. கெஞ்சிக் கேட்டு எப்படியாவது உன் மக கழுத்துலே தாலி கட்ட வச்சிடலாம்னு திட்டமா? சரியான ஃப்ராடு குடும்பம்!''

சிவராமன் அவமானத்துடன் தலை கவிழ்ந்தார்.

ஜெயம் கை கூப்பினாள்.

''தயவு செய்து சத்தம் போட்டு எங்களை அசிங்கப்படுத்தாதீங்கம்மா. என் புருஷன் மானஸ்தன். கண்டிப்பா நீங்க கேட்ட பணத்தைக் குடுத்துடுவார். ஒரு மாசம் பொறுத்துக்குங்க.''

''முதல்ல பணத்தை ஏற்பாடு பண்ணுங்க. அப்புறம் கல்யாணத்தை வச்சுக்கலாம்.''

''ஐயோ.. கல்யாணத்தை நிறுத்திடாதீங்கம்மா... மணமேடை வரைக்கும் வந்து கல்யாணம் நின்னு போனா. என் பெண்ணோட எதிர்காலமே பாழாய்டும். உங்களுக்கும் ஒரு பொண்ணு இருக்கு..''

''என்ன... சாபம் விடறியா? என் பொண்ணுக்கு அருமை யான வாழ்க்கை காத்துக்கிட்டிருக்கு. தகுதிக்கு மீறி ஆசைப்படக் கூடாது. உங்க தகுதிக்கு ஏத்த மாதிரி ரிக்ஷாக்காரன், பியூன் இப்படி வரன் பார்த்து மகளைக் கட்டிக் கொடுக்க வேண்டியதுதானே!''

''அம்மா... வார்த்தையை விடாதீங்க!'' விரல் நீட்டி எச்சரித்தார் சிவராமன்.

''என்னய்யா மிரட்டறியா?''

''ஐயோ.. நீங்க கொஞ்சம் சும்மாயிருங்க.. சம்பந்தியம்மா! பெரிய மனசு பண்ணி என் பொண்ணுக்கு வாழ்க்கை குடுங்கம்மா!'' சட்டெனத் தமயந்தியின் காலில் விழுந்தாள் ஜெயம்.

பதறி விட்டாள் அஸ்வினி.

''அம்மா.. என்னம்மாயிது? எந்திரிங்க முதல்ல!''

தோளைப் பிடித்துத் தூக்கி விட்டாள்.

தமயந்தியை நேருக்கு நேர் பார்த்தாள்.

''கடைசியா என்னதான் சொல்றீங்க?''

''பணம் வந்தாதான் என் பையன் உன் கழுத்திலே தாலி கட்டுவான்.''



''இதுதான் உங்க முடிவா?''

''ஆமாம்!''

''அப்ப எனக்காக ஒரு அரை மணி நேரம் பொறுத்துக்குங்க.. வந்திடறேன்!''

''நீ எங்கே போகிறே?''

''நம்பிக்கையான இடத்திலே உதவி கேட்டு! கண்டிப்பா எனக்கு உதவுவாங்க.. பணத்தோட திரும்பி வர்றேன்!'' அடுத்த கணமே, மணக்கோலத்துடன் வெளியேறினாள் அஸ்வினி.

அடுத்து நடந்ததெல்லாம் நம்ப முடியாதவையாக இருந்தன. அஸ்வினி போலீஸோடு வந்தாள். தன்னறைக்குள் உடைமாற்றிக் கொண்டிருந்த அமுதனைப் போலீஸ் கழுத்தில் கை வைத்து இழுத்துச் சென்றபோதுதான்... மண்டபத்தில் பிரச்சினை நடந்த விஷயமே தெரியும்.

அம்மா, அப்பாவுடன் அமுதன் சிறையில் அடைக்கப் பட்டான்.

விஷயம் இந்தளவுக்கு விபரீதமாகுமென்று தமயந்தி எதிர்பார்க்கவில்லை. போலீஸைப் பார்த்ததும் உண்மையை உளறிக் கொட்டி விட்டாள்.

அமுதன் இடிந்து போனான்.

பொன்னைச் சோதிப்பது நெருப்பு. பெண்ணைச் சோதிப்பது பொன். ஆணைச் சோதிப்பது பெண்.

தன்னைச் சோதித்த அஸ்வினியால் சீட்டுக் கட்டைப் போல் அவன் இமேஜ் சரிந்து போனது.

அஸ்வினியின் தைரியத்தைப் பாராட்டிப் பத்திரிகைகள் அவளை அட்டைப் படத்தில் போட்டு மாய்ஞ்சு மாய்ஞ்சு எழுதின. புரட்சிப் பெண் என்று கௌரவப்படுத்தின.

மீடியாக்களும் சும்மா விடவில்லை. மருதாணியில் சிவந்த விரல்களை நளினமாய் ஆட்டியபடி தனியார் டி.வி.க்களுக்குப் பேட்டி கொடுத்தாள். மாதர் சங்கங்கள் கூட்டம் கூட்டிப் பாராட்டிப் பரிசுப் பொருட்களைக் கொடுத்தன. அஸ்வினி ஒரே வாரத்தில் பிரபலமானாள்.

ஒரு பத்திரிகையாளர் தைரியமாய்க் கேள்வி கேட்டார்.

''படித்தவர், தைரியமானவர், அப்படியிருக்க, ஆரம்பத்திலேயே 'வரதட்சிணை தர மாட்டேன்!' என்று திருமண ஏற்பாட்டை நிறுத்தியிருக்கலாமே! வரதட்சிணை தர ஏன் ஒப்புக் கொண்டீர்கள்?'

சற்று நேரம் திணறி விட்டாள் அஸ்வினி.

''அப்போதே மறுத்திருந்தால்.. அமுதன் போன்ற கேவலமான பணப் பேயை, திருமண வியாபாரியை யாருக்கும் அடையாளம் தெரியாமல் போயிருக்கும். இந்த அஸ்வினி இல்லாவிட்டால், இன்னொரு, வர்ஷிணியை ஏமாற்றியிருப்பான். அமுதன் போன்று நிறைய ஆண்கள் நம் நாட்டில் உண்டு. பெண்கள் அவர்களை அடையாளம் கண்டு நல்ல பாடம் கற்பிக்க வேண்டும் என் வாழ்க்கையைப் பற்றிக் கவலைப்படாமல், நெருப்பில் இறங்கி விட்டேன். பெற்றோர், உற்றோர்களை விட்டு கணவன் வீட்டில் அவனுக்குத் தாதியாய், வேசியாய், வேலைக்காரியாய்ச் சேவை செய்யப் போகும் பெண்கள் எதற்குத் தர வேண்டும் வரதட்சிணை?'' காரசாரமாய்ப் பேட்டி கொடுத்தாள்.



அவளின் தைரியத்தைப் பாராட்டிப் பிரபல வர்த்தகப் பிரமுகர் வேணுகோபால் தன் மகன் அர்விந்துக்கு - சல்லிக் காசு கூட வாங்காமல் - அஸ்வினியைத் திருமணம் செய்ய முன் வந்தார்.

சிவராமன், ஜெயத்திற்கு மட்டுமல்ல.. அஸ்வினிக்கும் ஆனந்தம் தாங்கவில்லை.

போலீஸ், சிறை என்று அமுதனின் மானம் கப்பலேறியதால், நிர்வாகம் அவனை வேலையிலிருந்து டிஸ்மிஸ் செய்தது.

மிகச் சிரமப்பட்டுச் செலவழித்து, வித்யாதரன்தான் அவர்களை ஜாமீனில் எடுத்தான்.

அவர்கள் தலைதெரிந்தால் போதும்... ஆளாளுக்குக் கூடிப் பேசினர். வெளியில் வரவே கூசிப் போயினர்.

கண்ணாடி, மானம் வெகு சுலபமாக உடைந்து போகக் கூடியவை. மீண்டும் முன்போல் உருவாக்க முடியாதவை. அரைக் காசுக்குப் போன மானம், ஆயிரம் கொடுத்தாலும் திரும்ப வருமா? இதைக் காரணம் காட்டி நந்தினியின் திருமணமும் நின்று போனது.

தமயந்தி இடி விழுந்தாற்போல் மூலையில் அமர்ந்து விட்டாள்.

வித்யாதரனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. நிச்சயம் செய்தபின் நிறுத்தினால் நந்தினிக்குத்தானே அவப் பெயர்!

''இதை இப்படியே விட்டுடக் கூடாது, அமுதன். அந்தாளுக்குப் பாடம் கற்பிக்கணும்!''

''பச்... விடு வித்யா, என்னென்ன நடக்கணுமோ, அதெல்லாம் நடந்துதான் தீரும்!''

''எல்லாத்தையும் போனால் போகட்டும்னு விட்டுத் தரக் கூடாது, அமுதன். நீ எப்படிப்பட்டவன்! உன் சிந்தனைகள், லட்சியங்கள் எந்தளவிற்குத் தொலைநோக்குப் பார்வையைக் கொண்டவை! அறியாதவனா நான்? அப்படிப்பட்ட உன்னை அந்த அஸ்வினி சந்தி சிரிக்க வச்சிட்டாளே! அவளையும் சும்மா விட்டது தப்பு!''

''பழி உணர்ச்சியே கூடாது, வித்யா. பழிவாங்கினால் எதிரிக்கு நிகராவோம். அலட்சியம் செய்தால் எதிரியை விட உயர்ந்தவர்களாவோம். அந்தப் பெண்ணைக் குறை சொல்லி என்ன பயன்? அம்மா நடந்து கொண்ட விதம் தவறு. ஆரம்பத்திலேயே என் உறுதியிலிருந்து மாறாமல் அம்மாவின் எண்ணத்திற்குத் துணை போகாமல் இருந்திருக்கணும். வற்புறுத்தலுக்கு உடன் பட்டேன். அனுபவிக்கிறேன்.''

''வேலை போய்டுச்சே... என்ன பண்ணப் போறே? பணம் தேவைப்பட்டா தயங்காமக் கேளு, அமுதன்!''

''ரொம்ப தாங்க்ஸ் வித்யா. அதுக்கு அவசியம் இருக்காது. எதையும் மனசுல வச்சுக்காம சமயமறிஞ்சு மனிதாபிமானத் தோடு உதவி செய்யற உன் குணத்தைப் புரிஞ்சுக்க வேண்டியவங்க புரிஞ்சுக்கிட்டா சரி!'' அம்மாவைப் பார்த்தபடி சொன்னான்.

தமயந்தி குனிந்த தலை நிமிரவில்லை.

அவளின் அகம்பாவம், திமிர், ஆணவம், ஆசை அத்தனையும் தலை கவிழ்ந்திருந்தது.

யாரிடமும் சரிவரப் பேசுவதில்லை.

அவளை விட ஒரு படி மேலே போய்விட்டார், சொக்கலிங்கம்.



பசிக்காகக் கூட வாயைத் திறப்பதில்லை. உழைத்த காலத்திலும் சரி, ரிடையரான பின்பும் சரி, தன் வேலையுண்டு என்றிருந்தவரை நடந்த சம்பவங்கள் பெரிதும் பாதித் திருந்தன.

கௌரவமான குடும்பத்தில் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்தவர், போலீஸால் அடித்து, துவைக்கப்பட்டு, சிறையில் வாடி... நினைத்தே பார்த்திராத அவமானம் அல்லவா!

நடந்ததையே நினைத்து.. நினைத்து.. உப்புக் காற்று அரித்த இரும்புத் தகடாய்... இதயம் துருப்பிடித்துப் போனது.

தவறான முடிவு என்று தெரிந்தும் மனைவியின் செயலைத் தடுக்க முடியாத தன் இயலாமையை எண்ணிக் குமைந்தார்.

தன் பலம், வீரம், உரிமை, சுய விருப்பம் இது எதையும் வெளிப்படுத்தாத ஆண் வெற்றியடைந்ததில்லை.

தன்னைத்தானே காப்பாற்றிக் கொள்ள வலுவற்றிருக்கிற எதையும், எவரையும் இயற்கை அன்னை ஒருபோதும் காப்பாற்றுவதே இல்லை.

ஒரு நாள்.. காலை!

உறக்கத்திலேயே உயிரை விட்டிருந்தார் சொக்கலிங்கம்.

## 8

**நா**ம் வாங்கி வந்த உயிர்க்கு ஆண்டவன் கொடுக்கும் வட்டிதான் மரணம்.

சொக்கலிங்கத்தின் மரணம் அந்தக் குடும்பத்துக்கு எதிர்பாராத மரண அடி!

சுருண்டு விட்டாள் தமயந்தி. இதுநாள் வரை அவளுக்குப் பூவும், பொட்டும் பக்க பலமாய், இரு கைகளைப் போல்

தன்னம்பிக்கையைக் கொடுத்து வந்தன. இப்போது.. ஊனமாகிச் செயலழிந்து போனது போல் உணர்ந்தாள்.

நாட்கள் நகர்ந்தன.

வயது வந்த பெண்ணை, அதுவும் திருமணம் பேசி முடிவான பின், தடைப்பட்டுத் தந்தையை இழந்திருக்கும் பெண்ணை ரொம்ப நாள் வீட்டில் வைத்திருப்பது தவறு என்று உணர்ந்தான் அமுதன்.

அவள் திருமணம் குறித்து அம்மாவிடம் பேசினான்.

''அம்மா..''

''என்னப்பா?''

''நம்ம நந்தினிக்குச் சீக்கிரமே கல்யாணம் பண்ணிடணும்னு முடிவு பண்ணியிருக்கிறேன். நீ என்னம்மா சொல்றே?''

''அப்பா இறந்து மூணு மாசம் கூட முழுசா ஆகலே... அதுக்குள்ளே...''

''நல்ல காரியத்தை ஒத்திபோட வேணாம்னு தோணுது.''

''சரிப்பா.. அதுக்குப் பணம் வேணாமா?''

''ஆபீஸ்லே செட்டில் பண்ணிய பணமிருக்கு!''

''அப்ப உனக்கு?''

''எனக்குத் தன்னம்பிக்கை நிறைய இருக்கும்மா, கண்டிப்பா ஒரு வேலையைத் தேடிக்குவேன். வேலை கிடைக்கலேன்னா வித்யாதரன் மாதிரி கரண்டியைத் தூக்கிக்கிறேன்!''

''என்ன பேசறே?'' முகம் சுருங்கியது தமயந்திக்கு.

''சரி.. அதைவிடு.. கல்யாண ஏற்பாடைக் கவனிக்க ஆரம்பிக்கிறேன்!''



''மாப்பிளையே பார்க்கலே... அதுக்குள்ளே எப்படி?''

''நான் பார்த்தாச்சு! நம்ம வித்யாதரனைத்தான். நந்தினியைக் கேட்டுட்டேன். பூரண சம்மதம்!''

''என்ன அந்தச் சமையல்காரனையா?''

''அம்மா.. நீ இவ்வளவு அடிபட்டும் திருந்தவே யில்லையா? துன்பம் மனுஷனுடைய உண்மையான உரைகல். அப்படியும் மாறலேன்னா.. நீ மனுஷியே இல்லேம்மா!''

''அ..மு.. த..ன்..!''

''அப்பா இறந்ததுக்கு முழுக் காரணமே உன் பேராசைதான். இழந்த அப்பாவையோ, கௌரவத்தையோ, என் தன்மானத்தையோ, இனி உன்னால மீட்டுத் தர முடியுமாம்மா? உன் பிள்ளை நல்லவனா... வரப்போகிற மனைவிக்கு நல்ல கணவனா, நம்பிக்கையானவனா இருக்கணும்னு நினைச்சதுக்கு முட்டுக்கட்டை போட்டியே! நீ பெத்த பொண்ணு நல்லா வசதியா வாழணும்ங்கறதுக்காக, அடுத்த வீட்டுப் பெண்ணை, இன்னொரு தாய் வயிற்றில் பிறந்த பெண்ணை வரதட்சிணை கேட்டுப் பிழிஞ்செடுத்தியே! கல்யாணம் என்ன வியாபாரமா? எவ்வளவு கெஞ்சினேன்! கேட்டியா?

''நம்மைவிட ஒரு படி கீழே உள்ள குடும்பத்தில் உன் பெண்ணைக் கொடுக்க ஏம்மா மனசு வரலே? தகுதிக்கு மீறி ஆசைப்பட்ட உனக்கும் சரி, அதை எதிர்க்கத் துணிவில்லாத எனக்கும் சரி.. இது கிடைக்க வேண்டிய தண்டனைதான்! சட்டங்கள் மட்டும் இல்லேன்னா... நமக்குள் நாமே ஒருவரையொருவர் விழுங்கி ஏப்பமிட்டு விடுவோம்!

''பெண்களால் உலகம் அழிந்ததுண்டு. அவர்களே உலகத்தைக் காப்பாற்றியும் இருக்கிறார்கள். நீ இதிலே எந்த ரகத்திலே இருக்க விரும்பறே? யோசிம்மா.

''நந்தினிக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமைச்சுத் தர ஆசைப்படறேன். பெண்ணை மதிக்கிறவனால மட்டும்தான் நல்ல வாழ்க்கை தர முடியும். வித்யாதரன் நந்தினியைக் கண்ணுக்குள்ளே வச்சுப் பார்த்துப்பான். நான் முடிவு பண்ணிட்டேன். நீ என்னம்மா சொல்றே?''

''எந்தத் தாயுமே தன்னைவிடத் தான் பெத்த பொண்ணு பெரிய இடத்திலே வாழ்க்கைப் படணும்னு ஆசைப்பட்டுச் சில தவறான முடிவுகளை எடுக்கறதுண்டு. அதனால அவமானப் பட்டு என் புருஷனையும் இழந்துட்டேன்.

''என்னை மன்னிச்சிடு, அமுதன். உன் விருப்பப்படியே நந்தினியோட கல்யாணம் நடக்கட்டும்.''

''நடந்த கசப்புகளை மறந்துடும்மா! முழுமனசோட நந்தினியோட கல்யாண ஏற்பாடுகளைக் கவனி. பாவம்.. நீயும் என்ன பண்ணுவே? கொடுக்கத் தயாராயிருக்கும்போது, உன்னை மாதிரி கை நீட்டி வாங்கவும் தயாராயிருக்கத் தானே செய்வாங்க? சரி.. அதெல்லாம் விடும்மா.. இன்னைக்குச் சாயந்திரம் சம்பிரதாயத்துக்காக நந்தினியைப் பொண்ணு பார்க்க அத்தையும், வித்யாதரனும் வர்றாங்க..!''

''அதுக்கான எல்லா ஏற்பாடுகளையும் நான் பார்த்துக் கறேன்!'' என்றாள் தமயந்தி, உடனடியாக. அமுதன் மனம் மகிழ்ந்தான்.



அடுத்த ஒரு மாதத்தில் வித்யாதரன் - நந்தினி திருமணம் நடைபெற்றது.

அமுதன், நந்தினியின் திருமணத்திற்காகப் பேங்க்கில் போடப்பட்டிருந்த பெரிய தொகையை வித்யாதரனிடம் கொடுத்து, ''உன் லட்சியப்படி ஒரு சிறிய ஹோட்டலை ஆரம்பி!'' என்றான்.

''என்னைத் தப்பா நினைச்சுக்காதே, அமுதன். நந்தினியே எனக்குக் கிடைத்த பெரிய சொத்துதான். உன்னைப் போலதான் நானும் தட்சிணை என்கிற பெயரில் என்னை நம்பி வருகிற பெண்ணிடம் பத்து ரூபாய் வாங்குவதைக் கூடக் கேவலமாய் நினைப்பவன். நந்தினியை எந்தக் குறையுமின்றிச் சந்தோஷமாய் வைத்திருப்பேன் என்ற நம்பிக்கை நிறையவே இருக்கிறது. இந்தப் பணம் எனக்கு வேண்டாம். நீ ஏதாவது பிசினஸ் செய்ய யூஸ் பண்ணிக்க!'' என்று மறுத்தான் வித்யாதரன்.

அமுதன் அவனைப் பெருமிதத்துடன் தோளில் தட்டிக் கொடுத்தான்.

ஜெம் ரெஸ்டாரன்ட்! சன்னமான வெளிச்சத்தில்.. ஆர்டர் பண்ணி உணவுப் பொருட்களுக்காகக் காத்திருந்தனர், அஸ்வினியும், அர்விந்தனும். பணக்கார வீட்டு மருமகள் என்பதற்கு ஏற்றபடி உடலில் சகல நகைளுடன் மனம் நிறைய மகிழ்ச்சியுடன் கணவனுடன் அமர்ந்திருந்தாள். அர்விந்தனின் செல்ஃபோன் அலறியது.

''இங்கே சிக்னல் கிடைக்காது.. நான் பேசிட்டு வர்றேன்!'' என்று அவசரமாய்க் கதவைத் திறந்து வெளியேறிப் போனான்.

தனியே அமர்ந்திருக்க போரடித்தது. மெல்லச் சுற்றிலும் கண்களை ஓடவிட்டாள். திக்கென அதிர்ந்தாள்.

''இவனா?''

இவளுக்குப் பின்புறமாய் அமுதனும், முகுந்தனும் அமர்ந்திருந்தனர். தீவிரமாய் பேசிக் கொண்டிருந்ததால் அமுதன் இவளைக் கவனிக்கவில்லை.

''குண்டூர்ல பில்டிங் கன்ஸ்ட்ரக்ஷன்ல சூபர்வைசர் வேலைங்கறே... அம்மாவை யார் பார்த்துக்கறா?'' என்று கேட்டான் முகுந்தன்.

''வித்யாதரன்தான்! நான் மாசத்துக்கு மூணு நாள் லீவுல வந்திடுவேன்.''

''இங்கேயும், அங்கேயுமா அலைஞ்சிட்டிருக்கியே, கஷ்டமா யில்லையா அமுதன்?''

''உத்யோகம் புருஷ லட்சணம். கஷ்டத்தைப் பார்த்தா முடியுமா? கவர்ன்மென்ட் ஜாப் கைவிட்டுப் போயாச்சு. ஆனா, கூடிய சீக்கிரம் இங்கேயே ஒரு பிசினஸ் ஆரம்பிக்கலாம்ன்னு இருக்கேன்!''

'செய்.. உன் நல்ல மனசுக்கு எல்லாமே நல்லதாகவே முடியும். அந்த டவுரி கேஸ் வேற நடந்துட்டிருக்கில்லே? ஜட்ஜ்மெண்ட் உனக்கெதிரா வந்தா என்ன பண்ணுவே அமுதன்?'' கவலையாய்க் கேட்டான் முகுந்தன்.

''மனச்சாட்சியின்படி நடப்பவன் யாருமே நீதிமன்றத்தின் தண்டனைக்குப் பயப்படுவதில்லை, முகுந்தன். நடப்பவை நடக்கட்டும். என்னைப் பொறுத்தவரை வெற்றிகளை விட சில தோல்விகள் கூட வெற்றிகரமாக இருக்கிறது. இந்தச்



சம்பவத்தால் அப்பாவின் மரணம் ஈடு செய்ய முடியாத இழப்பு. ஆனால், அம்மா மனம் மாறியதும், நந்தினியை வித்யாதரனுக்கு மணம் முடித்ததும்.. என் வாழ்க்கையில் நடந்த அற்புதங்கள்.''

''அந்த அஸ்வினிக்குக் கல்யாணமாயிடுச்சு... தெரியு மில்லே? பையன் பெரிய பணக்காரன். எப்படியோ வளைச்சுப் போட்டுட்டா!''

''சேச்சே... அப்படியெல்லாம் ஒரு பெண்ணைப் பத்தி அபத்தமாகப் பேசக் கூடாது. என்னால அவ வாழ்க்கை கேள்விக் குறியா ஆயிடுமோன்னு பயந்தேன். நல்லவேளை! அவளுக்கு நல்ல வாழ்க்கை அமைஞ்சிடுச்சு. அதுக்காகச் சந்தோஷப்படறேன்!''

''அவளுக்குப் போய் சப்போர்ட் பண்றே! மறந்திட்டியா? உனக்கு வேலை போனது, உங்கப்பா இறந்தது, மானம் போனது எல்லாத்துக்கும் காரணம் அந்த அஸ்வினிதான்!'' என்றான் கோபமாக. ''எனக்குச் சந்தேகமாயிருக்கு!''

''என்ன?''

''நீ அந்த அஸ்வினியை லவ் பண்ணியா?''

''சேச்சே..!''

''பின்னே எதுக்காகப் புரட்சிப் பெண் அஸ்வினியை விட்டுக் கொடுக்காமப் பேசறே?'' கிண்டலாய்க் கேட்டான் முகுந்தன்.

''அநாவசியமா அடுத்தவங்களைப் பத்திப் பேசறது எனக்குப் பிடிக்காது. அவ்வளவுதான். ஆனா மீடியாக்கள் அவளைப் புரட்சிப் பெண்ணுன்னு சொல்றதை நான் ஏத்துக்க

மாட்டேன். அவள் புரட்சிப் பெண்ணல்ல. சமயத்திற்குத் தகுந்தபடி வளைந்து போகும் சராசரிப் பெண்தான். பெண் என்பவள் தைரியமாய், தன் உரிமையை விட்டுத் தராத புதுமைப் பெண்ணாய் இருக்க வேண்டும். அப்படியொரு பெண்ணைத்தான் கட்டின புடவையோடு என் மனைவியாய் ஆக்கிக் கொள்ள வேண்டுமென்று ஆசைப்பட்டேன். அம்மா வருபவர்களிடம் வரதட்சிணை கேட்டபோது காறித் துப்பி அனுப்பியிருக்க வேண்டாமா? நான் பெண் பார்க்க வந்த அன்றே, 'வரதட்சிணை தர மாட்டேன்!' என்று தைரியமாய்ச் சொல்லியிருந்தால் பெருமைப்பட்டிருப்பேன். என் மனதில் இடம் கொடுத்திருப்பேன். வசதி வாய்ப்புகளுக்குத் தக்கபடி வாழ்க்கையில் விளையாடுவது புதுமைப் பெண்ணுக்கு அழகல்ல! அவள் முகம் கூட எனக்கு நினைவில் இல்லை. நிச்சயம் நடந்த பிறகு ஒரு முறை கூட அவளிடம் போனில் பேசியதில்லை. ஏனோ பிடிக்கலை. இதுவே, பணம் கிடைச்சிருந்தா.. அந்தக் கல்யாணம் நடந்திருக்கும். கிடைக்காததால் எங்களை ஜெயிலுக்கு அனுப்பிப் புதுமைப் பெண், புரட்சிப் பெண்ணுன்னு பேர் வாங்கிக்கிறதுல என்ன அர்த்தமிருக்கு? எல்லாமே சுயநலம்தானே!''

அவன் பேசப் பேச... கேட்டுக் கொண்டிருந்த அஸ்வினி முகத்தில் அறைபட்ட உணர்வில் ஸ்தம்பித்துப் போயிருந் தாள்.

''ஓக்கே அமுதன். நீ வாழ்க்கையில் அளவுக்கதிகமாகவே பிரச்சினைகளைச் சந்திச்சுப் போராடிட்டே! இந்த நேரத்திலே தான் உனக்கொரு துணை, வாழ்க்கைத் துணை அவசியம். சீக்கிரமே ஒரு நல்ல பெண்ணாய்ப் பார்த்துக் கல்யாணம் பண்ணிக்க. வேணும்னா நானே உனக்குப் பொண்ணு பார்க்கறேனே!''



''நானும் இதைப்பத்தி யோசிச்சேன், முகுந்தன். ஒரு முடிவுக்கு வந்துட்டேன்.''

''நிஜமாவா? கேக்கவே சந்தோஷமாயிருக்கு. பொண்ணு பார்த்திட்டியா?''

''ம்.. அவளோட அண்ணன்கிட்டே சம்மதம் கேட்கணும்..''

''யாருன்னு சொல்லு.. போய்ப் பேசி முடிச்சிடுவோம்..''

''பொண்ணுபேர் அம்ருதா... அவளோட அண்ணன் பேர் முகுந்தன்!''

''அ..மு.. த.. ன்!'' என்றான் அதிர்ச்சியுடன்.

''....?!''

''உனக்கென்ன பைத்தியமா பிடிச்சிருக்கு? என் தங்கையைப் போய்..''

''ஏன்..எனக்குத் தகுதியில்லையா?''

''என் தங்கைக்கு இல்லையே அமுதன்! இன்னும் மலராத மொட்டு அவள், டாக்டர்களும் நம்பிக்கையாய் எதையும் சொல்லாதபோது... உன் வாழ்க்கையை ஏன் அமுதன் வீணாக்கணும்?''

''போகும்போது என்னத்தை அள்ளிக்கிட்டுப் போகிறோம்? வாழற வாழ்க்கையை அர்த்தப்படுத்திக்கணும்... உன்னைப் போல! விளக்கமாய்ப் பேசி என் தலையைச் சுற்றி ஒளிவட்டம் வச்சுக்க விரும்பலே.. அம்ருதாவை மணக்க மனப்பூர்வமாய் விரும்பறேன். என்ன சொல்றே?''

முகுந்தன் உணர்ச்சிவசப்பட்டு அமுதனின் கைகளைப் பற்றிக் கண்களில் வைத்துக் கொண்டான். முகுந்தனின் கண்ணீர் சம்மதத்தைச் சொன்னது.

நெகிழ்ந்து போய்விட்டாள், அஸ்வினி.

'அவசரப்பட்டு விட்டேன். இவரின் மனதைப் புரிந்து கொள்ளாமல் தவறாக அர்த்தம் கற்பித்து, பழிவாங்க வேண்டும் என்று ஒரே குறிக்கோளுடன் நான் நடத்திய நாடகத்தால், ஒரு உயிரையுமல்லவா பலிவாங்கி விட்டேன்! இலட்சிய இளைஞனின் வாழ்க்கை சீரழிய நான் காரணமாகி விட்டேனே!' நினைத்து.. நினைத்துத் துடித்தாள்.

'முதலில் கேஸை வாபஸ் வாங்க வேண்டும்!' முடிவு செய்தாள்.

அமுதனும், முகுந்தனும் வெளியேறிச் சென்றனர்.

அஸ்வினி மானசீகமாய் அவனை நோக்கி வணங்கி மன்னிப்புக் கேட்டாள்.

அமுதனின் வாழ்க்கையிலும் வசந்தங்கள் தேடி வரும். அவன் பிரச்சினைகள் முற்றுப் பெறும். முடிவில்லாத பாதையென்று எதுவுமில்லை.